கலசம்

தெணியான்

தங்கள் கடிதமும்,எனது சிறுகதைக்கான சன்மானமாக ரூபா 10- (செக் இல. பி. ரி. 025669)ம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி பரந்த ஒரு வாசக வட்டத்தைப் பெற்றுத் தரத் தொடர்ந்தும் கலசத்தின் ஆதரவு எனக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

புசல்லாவை — தி. ஞானசேகரன்

ஐயா ஆசிரியரே! கலசம் ஒரே பெண்கள் மயம்.இதில் என்ன இரகசியமோ?

தெகியோவித்த — ஏ. எஸ். மஹ்ரூப்

சங்கு சுட்டாலும் உணர்ச்சியான சிறுகதை. எனது இதயத்தையே சுட்டுவிட்டது.

பேராதனை — அப்துல் நிஸார்

1945ல் இருந்து அரசியல், சோசலிசம், கலாசாரம், பொறியியல், அரசாங்க சேவை, ஆங்கில இலக்கியம் ஆகிய எத்தனையோ பற்றி அமைச்சர் எழுதிய அழகு சுவைதுவட்டும் கடிதங்கள் என்னிடம் உள. என்னே என் பாக்கியம். என் பாக்கியம் மட்டுமா? எம் சமூகத்தின் பாக்கியமும்கூட, எனக் கூறில்கூட, அது கூட அல்ல எனலாம். தங்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தற்கால அடிப்படைக்குத் தகுந்தவற்றைத் தொகுத்துத்தரக் காத்திருக்கின்றேன்.

அந்நியராட்சியில் தமிழ் பயின்ற,உங்கள் கலசப் பிரியன்.

திருமலை — க.ச.ஆறுமுகன்

கலசம் முதற் பிரதி எனது கண்களுக்கு வெளிநாட்டு மலர்களைக் கொண்டு தொடுத்த அழகிய மாலையாகக் காட்சி கொடுத்தது. ஈழத்து வாசனை அதிகமாகக் கமழவேண்டும்.

கோண்டாவில் — க. கயிலைவாசன்

'கமலி'க்காக தாங்கள் அனுப்பிய ரூபா 10 கிடைத்தது. நன்றி. தாங்கள் எல்லாமேபுதுமையாகத் தான் செய்கிறீர்கள்.

திருநெல்வேலி — ஈழத்துறைவன்

வானொலியில் கலசம் விமர்சனத்தைக் கேட்டேன். கத்துக் குட்டிகள் கத்தட்டும். கழுதைகள் அறியுமோ கற்பூர வாசனை? நடத்துங்கள் உங்கள் பணியை.

கல்கிசை — எஸ். சிவகுமாரன்

கல்கண்டு இல்லாத குறையைக் கலசம் ஓரளவுக்காவது பூர்த்தி செய்தது.

பதுளை — கல்கண்டுப் பிரியன்

ஈழத்து இலக்கியத்தில் கலசம்

மலர்: 1 | 1—6—1972 | இதழ்: 2

கலசத்தில் எழுத்துப் பிழைகள் அதிகம்.அதனுல் தான் ஆசிரியர் பெயரை போடாமல் விட்டு விட்டீர்களோ?

வாழைச்சேனை — செல்வி சுகந்தமலர்

ஒரிஜினலிட்டி தட்டுப்பாட்டிலா கல்கண்டு என்று பெயர் வைத்தீர்கள்? ஏதாவதொரு கிழமைப் பேரை வைத்திருக்கலாமே.

பட்டிருப்பு — வ.ஆறுமுகம்

உண்மையிலேயே நான் கொடுத்த காசுக்கு, கலசத்தில் நிறைய விஷயங்கள் இருந்தன. கலசத்தின் லட்சியம் வரவேற்கக்கூடியதாக இருக்கின்றது. 'பீலிக்கரையினிலே' என்ற கட்டுரை வெகு ஜோர். கட்டுரையைப் படித்ததும் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. காரணம் எங்கள் தோட்டத்துப் பீலிக்கரையிலே தினசரி நடப்பதைப் படம்பிடித்துக் காட்டியதைப் போல் இருந்தது.

பறக்கடுவை — இ. இராஜரட்னம்

இலக்கியம் வளர்க்கவில்லை என்று கூறி இலங்கைக்குப் புதியதொரு இலக்கியத்தை அறிமுகப் படுத்தி விட்டீர்கள்.

சண்டிலிப்பாய் — தி.ச.குலநாயகம்

பத்திரிகை அமைப்பு புதுமையாக இருக்கிறது. இன்னுமொரு புதுமை வழமையாக இலங்கையில் தோன்றும் பத்திரிகைகளில் இருப்பது போல்,ஆசிரியர் பெயர் முகவரி இல்லாதது!

மஸ்கெலியா — என். பழனிவேல்

கலசம் முதல் இதழ் மனதிற்கு ரம்மியமாகவும், சிந்தைக்குச் சுவையாகவும் இருந்தது. எனது கட்டுரைக்குத் தாங்கள் 'செக்' மூலம் அனுப்பிய ரூபா 5-00 இடைக்கப் பெற்றேன். நன்றி. எடுத்த எடுப்பிலேயே பணத்தை அள்ளி வீசுகின்றீர்களே! எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஆர்வத்தைக் கண்டு பெருமையடைகின்றேன்.

கல்கிசை — புவரிஷி

பத்திரிகை அட்டை பஞ்சாங்கம் மாதிரி இருந்தது.

வவனியா — க. ஆ. சோமகாந்தன்

உணர்ச்சியான கடிதம்தான்.ஆனுல் உண்மையில் அமைச்சர் 20 ஆண்டுகளுக்கு முன் எழுதியது தானு? நினைவுகள் பசுமையாக இருக்கின்றன.

ஆண்டாங்கேணி — கா.சிவத்தம்பி

அள்ளிக் கொடுக்கும் வள்ளல், தேசிய இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட செம்மல், திரு. வி. எஸ். துரைராஜா, கலசம் பப்ளிக்கேஸன்ஸ் வெளியீட்டாளரான திரு. கனக. பாலசுப்பிரமணியத்திடமிருந்து 'கலசம்' முதலாவது பிரதியை உள்ளன்போடும், ஆசிகளோடும் வாங்கி விற்பனையைத் தொடக்கிவைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.

அடுத்த இதழில்...

கலசம் அடுத்த இதழில் 'கேள்வி—பதில்' பகுதி இடம் பெறும். பயப்படாதீர்கள்! நமது ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் எவரும் பதில் அளித்து உங்களைப் 'போர்' அடிக்க வைக்க மாட்டார்கள்.

ஒவ்வொரு இதழிலும் வெவ்வெறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பார்கள்.

அடுத்த இதழில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த உங்கள் அபிமான அறிவிப்பாளர் திரு. எஸ். பி. மயில்வாகனன் பதில் அளிக்கிறார்.

வாசகர்கள் கேள்விகளை அஞ்சல் அட்டையில் மட்டும் எழுதி, கீழே உள்ள முகவரியை வெட்டி ஒட்டி 15—6—72க்கு முதல் அனுப்பி வைக்கவும்.

சிறந்த கேள்விக்குப் பரிசும் உண்டு.

—கலசம் பப்ளிக்கேஸன்ஸ்.

கேள்வி பதில்
கலசம்
30, ஷீ அவனியூ,
கொழும்பு-3.

இலங்கை குடியரசாகி விட்டதல்லவா, குடியரசை ஆங்கிலத்தில் 'ரிப்பப்ளிக்' என்று 'சொல்வார்கள். இந்த வார்த்தை 'ரெஸ்' 'பப்ளிக்' என்ற லத்தீன் வார்த்தைகளில் இருந்துதான் ஆங்கிலத்தில் ரிப்பப்ளிக்காகியது. இலங்கை குடியரசாகிய பசுமையான தினத்தில் நடைபெற்ற இனிமையான சம்பவங்களை நீங்கள் சுவைத்துப் பாருங்கள்.

X குடியரசு விழாவில் கலந்துகொள்வதற்கு நவரங்கசாலைக்கு வந்த பிரதமர் ஸ்ரீமாவோ கட்டியிருந்த சேலை, இளநீல வர்ணத்தில் இருந்தது. அதில் கருநீல வர்ணமும், சிவப்பும் கலந்த மலர்கள் உள்ள 'பார்டர்' மிகவும் கவர்ச்சியாக இருந்தது.

X அரசமைப்பு நிர்ணய சபையில் வாக்கெடுப்பு நடந்தபோது தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் சட்டத்துக்கு ஆதரவா எனக் கேட்கப்பட்டது. ஆம் என்று பதில் கூறப்பட்டது. திடீர் என எல்லோரும் அதிர்ச்சியுடன் எஸ். ஜே. வி.யின் ஆசனத்தைப் பார்த்தனர். அங்கு எஸ்.ஜே.வி. இல்லை. அருகில் ராஜன் செல்வநாயகம் சிரித்துக்கொண்டு 'ஹாயா'க இருந்தார்.

X நவரங்கசாலையில் நடைபெற்ற குடியரசு பிரகடன வைபவத்திலும், பின்னர் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சத்தியப் பிரமாண வைபவத்திலும் கலந்துகொண்ட தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் வேட்டி, சால்வை, நஷனல் சகிதம் தேசிய உடை அணிந்து இருந்தார். அவரது சால்வையிலும் வேட்டியிலும் நீலக் கரை போடப் பட்டு இருந்தது.

X ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சத்தியப் பிரமாண வைபவத்தின் பின்னர் அமைச்சர்களின் மனைவிமார் பத்திரிகைக் காமிராக்களுக்குப் 'போஸ்' கொடுத்தனர். அப்போது அவர்களுக்கு அருகில் நின்ற ஜனாதிபதி திரு வில்லியம்கோபல்லாவ இது தான் உண்மையான மந்திரி சபை என்று "ஜோக்" காக கூறினார். அப்போது அங்கு எழுந்த சிரிப்பு ஒலி அடங்கச் சிறிது நேரம் பிடித்தது.

X நவரங்கசாலை நிகழ்ச்சிகள் முடிந்ததும் தமிழ்க் காங்கிரஸ் எம். பீ.க்கள் இருவரும் 'பவுன்டன் ஹவுஸு'க்குச் சென்று 'குளு குளு ஐஸ்கிறீம்' சாப்பிட்டனர்.

X ஜனாதிபதி மாளிகையில் அரசமைப்பு அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வாவைப் பத்திரிகைக்காரர்கள் படம் பிடிக்க ஆயத்தம் செய்தனர். அப்போது டாக்டர் கொல்வின் "அம்மே கம் அன்ட் ஸ்டான்ட் வித் மீ" என்று தமது மனைவியாரைச் செல்லமாக அழைத்தார். திருமதி கொல்வின் மறுத்துவிட்டார். அமைச்சர் இரண்டு மூன்று தடவைகள் தமக்கு அருகில் வருமாறு தமது மனைவியைக் கேட்டார். அவர் தயங்கித் தயங்கி வந்தபோது அமைச்சர் தமது அன்பு மனைவியாரின்கையைப் பிடித்து இழுத்துத் தமக்கு அருகில் அழைத்து வைத்துக்கொண்டார். காமிராக்கள் 'கிளிக் கிளிக்' சத்தத்துடன் பளிச்சிட்டன.

X புதிய அரசியல் சட்டம் அரசமைப்பு நிர்ணய சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அமைச்சர் குமாரசூரியர், காங்கிரஸ் உறுப்பினர்கள் அருளம்பலம், தியாகராஜா ஆகியோர் தமது வாக்கை "ஆம்" என்றே தமிழில் கூறி அளித்தனர். யாழ்ப்பாணம் எம். பி. மார்ட்டின், ஆங்கிலத்தில் "யெஸ்" என்றார். மட்டக்களப்பு எம். பி. ராஜன் செல்வநாயகம் சிங்களத்தில் "பக்ஸாய்" என்றார்.

X நவரங்கசாலை மண்டபத்துக்கு வந்தவர்கள் அனைவரும் புளுக்கத்தால் அவதிப் பட்டுக் கொண்டிருந்தனர். அங்கு விநியோகிக்கப் பட்ட நிகழ்ச்சி நிரல் புத்தகத்தால் அனைவரும் 'ஜம்' என்று காற்று

விசிக் கொண்டனர்.

X குடியரசுப் பிரகடன வைபவத்துக்கு

நல்லூர் எம். பி. அருளம்பலம், வட்டுக் கோட்டை எம். பி. தியாகராஜா ஆகியோர் நஷனலுடன் சாதாரண வேட்டி சால்வை அணிந்து வந்தனர். நல்லூர் எம். பி யின் சால்வையில் நீல நிறக் கரை இருந்தது. தியாகராஜாவின் சால்வையில் தங்கக் கரை இருந்தது. பட்டிருப்பு எம். பி. தம்பிராஜா, மட்டக்களப்பு எம்.பி. ராஜன் செல்வநாயகம் ஆகியோர் பட்டு வேட்டி, நஷனல், சால்வை அணிந்திருந்தனர். யாழ்ப்பாண எம். பி. மாட்டின் கோர்ட் சூட்டுடன் சிவப்பு நிற 'டை' அணிந்து வந்திருந்தார்.

X இலங்கைக் குடியரசின் முதல் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்யத் திருமதி ஸ்ரீமாவோ ஆசனத்தை நோக்கிச் சென்றபொழுது இடது காலை முதலில் தூக்கி வைத்தே படிகளில் ஏறிச் சென்றார். ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்யத் திரு வில்லியம் கோபல்லாவை செல்லும் போது வலது காலை முதலில் தூக்கி வைத்துப் படிகளில் ஏறிச் சென்றார்.

X நவரங்கசாலைக்கு நியமன எம். பி ஜனாப் ஏ. அஸீஸ் 'பாகிஸ்தான்' பாணியில் கறுப்பு சர்வாணி அணிந்து வந்தார். ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் வெள்ளை கோட்டும், சூட்டும் அணிந்து வந்திருந்தார். ஜனாப் பதியுத்தீன் சாம்பல் நிறக் கோட்டும் சூட்டும் அணிந்து வந்திருந்தார். ●

Qualified

OPTOMETRISTS

MOHANLAL C, VASA,

207, Second Cross Street,

COLOMBO-11.

T'Phone: 21631,

சிரிப்பின் ராகங்கள்

மகன்: அப்பா பத்தாம்பசலி என்றுல் யார்?

அப்பா: கள்ளம், கபடு, சூது, வாது தெரியாதவன்!

மகன்: அப்போ, இதெல்லாம் தெரிந்தவன் முதலாம்பசலியா?

பரிசு

ஒருவன்: போன மாதம் எவ்வளவு சந்தோஷமாக இருதயமாதம் கொண்டாடினேன்.
மற்றவன்: அதற்கு என்ன இப்போ?
ஒருவன்: சற்று முன்தான் என்காதலி அதைச் சுக்கு நூறுகப் போட்டு உடைத்து விட்டுப் போகிறுள்.



இப்படத்துக்குரிய நகைச்சுவையை நமது துணை ஆசிரியர் தவற விட்டுவிட்டார்.

நீங்களே இதற்கு ஒரு நகைச்சுவையை எழுதி 15—6—72 க்கு முன் எமக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த ஒரு நகைச் சுவைக்கு பரிசாக ரூபா 10 கிடைக்கும்.

இங்கே உள்ள முகவரியை ஒட்டி அனுப்பப் படாத துணுக்குகள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது.

"நகைச்சுவை"

கலசம்

30, ஷீ அவனியூ,

கொழும்பு--3

நடிகை: மணி நாலரை ஆகிறது, இன்னும் 'மேக்கப் மெண்' வரவில்லையே.
டைரக்டர்: 'மேக்கப் மென்' அவசியமில்லை, படப் பிடிப்பை ஆரம்பிக்கலாம்.
நடிகை: அது எப்படி சேர்?
டைரக்டர்: இன்று நீங்கள் கிழவி வேடத்தில்தான் நடிக்கிறீர்கள்!

With the best compliments from:

ARUMUGAM & CO.,

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS
FOR LOCAL PRODUCE.

107, 4th Cross Street,
COLOMBO - 11.

Telephone: 25201 T'Gram: TRANSACTOR

With best compliments from:

KRISHNAKUMAR & CO.,

IMPORTERS AND DISTRIBUTORS OF FOODSTUFFS

185, 4th Cross Street,

COLOMBO-11.

T'grams: TRADERIGHT.

நினைவின் அலைகள்

வாழ்க்கையின்—சமூக அமைப்பின்—பிரதிபலிப்பான இலக்கியமும், கணிதமும் பலவகையில் பிணைக்கப்பட்டுள்ளன. இலக்கியமா, கணிதமா முதல் தோன்றியது என்ற பிரச்சினை என் சிந்தனையைச் சிறு வயதிலிருந்தே கிளறிக் கொண்டிருக்கின்றது. வேத உபநிஷத காலத்திலிருந்து இந்துக்கள் ஞாயிறையும், திங்களையும், செவ்வாயையும், புதனையும், மற்றும் கோள்களையும், அவற்றிற்கு அப்பாலும் நிறைந்துள்ள பரம் பொருளையும் பூஜித்தனர். கிரகங்களையும் மற்றும் கோள்களையும் அக்கால மக்கள் உணர்ந்து கொண்டது மட்டுமன்றி அவற்றின் அசைவுகளை—போக்குகளை மிகவும் துல்லியமாகக் கணித்தனர். அவர்களால் அப்படிக் கணிக்க முடிந்தது எப்படி? கணிதத் துறையில் அக்கால இந்துக்கள் அடைந்திருந்த பெரும்வளர்ச்சியைத்தான் இது காட்டுகிறது.

கணித சாஸ்திர வளர்ச்சி, அறிவு வளர்ச்சிக்கு அடிகோலியது. சமுதாய உணர்வை வளர்த்தது, சமுதாய நோக்கை ஏற்படுத்தியது. மனிதஇனம் வளர, கட்டுப்பாடு, சட்டம் ஆகியவை இன்றியமையாதன என்பதை மனிதன் உணர்ந்தான்.

சைபர் (சூனியம்) என்ற கருத்தைக் கண்டுபிடித்ததே இந்துக்கள் தான். சூனியம் என்ற கருத்து மிகவும் முக்கியமானது. சூனியம் என்றால் என்ன? ஒன்றுமில்லாத நிலை. ஒன்றுமில்லாத நிலையென்று ஒன்று இருக்க முடியுமா? கடவுள் எங்கும் வியாபித்திருக்கின்றார் என்ற எமது இந்து சமயக் கொள்கைக்கு அது முரணானதல்லவா? சூனியம் என்ற ஒன்றுமற்ற நிலை, எங்குமே இல்லை என்பதே தற்கால விஞ்ஞானக் கோட்பாடாகும். எனவே, சூனியம் என்பது உண்மையில் இருக்க முடியாத நிலை. வெறும் தர்க்க வாதக் கொள்கை. இதைத் தெரிந்து கொள்ளுமளவிற்கு ஆதிகால இந்துக்கள் கணித சாஸ்திரத்தில் முன்னேறியிருந்தனர்.

கணித சாஸ்திரத்தில் ஆகச் சிறியதையும், ஆகப் பெரியதையும் ஓரளவில் ஒரே நிலையில் உள்ளவையாகக் கொள்வர் கணித நிபுணர்கள். இந்த நிலையைத்தான் சைவ சமயக் குரவர்கள் ஆதியும் அந்தமுமற்ற நிலை எனக் குறிப்பிட்டார்கள் போலும்.

இந்து மக்கள் கணித சாஸ்திரத்தில் வல்லவர்கள். கணிதவியல்அறிவு, மனித வாழ்க்கையின் எல்லா துறைகளையும் பாதிக்கின்றது. இலக்கியமானாலும் சரி, அரசியல், பொருளாதார, சமுதாயக் கோட்பாடுகளானாலும் சரி, ஓரளவிற்குக் கணித்து நிறுத்தி அளந்து நிர்ணயிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

நிகழ்ச்சிகள் எதையும் தனித் தனியாகப் பிரித்து அளவிடவோ மதிப்பிடவோ முடியாது. எந்த நிகழ்ச்சியும் தனித்து நிற்பதில்லை. எப்பொழுதும் நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று தொடர்பு உடையவையாகவே இருக்கின்றன. எனவே எந்த நிகழ்ச்சியையும் சரியாகக் கிரகித்துக் கொள்வதற்கு நிகழ்ச்சிகளை முழுமையாக—எல்லா அம்சங்களும் உள்ளடக்கிய சங்கிலிக் கோர்வையாகப்—பார்த்தல் வேண்டும்.

எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அங்கம் அங்கமாகப் பிரித்துப் பார்த்துக் குழப்பாமல், முழுமையாக நாம் நோக்குதல் வேண்டும். அந் நிகழ்ச்சிகளை முழுமையாகப் பார்த்து அவற்றின் முக்கியத்துவத்தைக் கணித்து, பரிசீலித்து, அப்பரிசீலனையின் முடிவைக் கவனமாக எடைபோட்டு, அம் மதிப்பீட்டிற்கிணைய நடந்து கொள்ளுதல் வேண்டும். நவீன சமுதாயத்தைக் குழப்பமின்றி உருவாக்குவதற்கு நாம் செய்ய வேண்டியது இது தான்.

அமைச்சர் செல்லையா குமாரசூரியர்

லேடீஸ் ஸ்பெஷல்

க. யோகேஸ்வரி
யாழ்ப்பாணம்.

நெருப்பினுல் ஏற்பட்ட புண்களுக்கு ஒரு மருந்து: கோழி முட்டையின் வெண் கருவையும், கருவேலம் பிசினை யும் கலந்து அரைத்துப் போடுங்கள். நெருப்புப்பட்ட தழும்புகள் கூட இல்லா மல் குணமாகிவிடும்.

பெண்கள் அடிமேல் அடி எடுத்து வைத்து மெல்ல நடக்க வேண்டும். இதுதான் பெண்களுக்கு அழகு. அமெ ரிக்கப் பெண்கள் தங்கள் கால்களை நீட்டி வைத்துப் பெரிய நடை போடுகிருர்கள். இதனுல் அமெரிக்கப் பெண்கள் நடக்கும் போது பார்த்தால் ஒயிலாக இருக்காது. ஆண்கள் நடப்பதைப் போல் இருக்கும்.

பிரான்ஸ் நாட்டுப் பெண்கள் புதுப் புது மாடல்களில் உடைகளை அணி கிருர்கள். இவர்களது மாடல்கள் வரவரப் பெண்களின் உடலில் உடைகளே இல்லா மல் போய்விடுமோ என்று நினைக்கும் அளவில் போய்க்கொண்டிருக்கின்றது. வர்ணத்தைப் பெயின்ட் அடிப்பது போல உடம்பில் அடித்துக்கொள்வது பிரான்ஸ் பெண்களின் லேட்டஸ்ட் பாஷன்.

பெண்களின் கால்கள் ஒல்லியாக இருக்கவேண்டும். கால்கள் பருமனுக இருந்தால் கால்களின் அழகு கெடும். ஒல்லியான கால்களை உடைய பெண் களையே ஆண்கள் மிகவும் விரும்புகிருர் கள். கால்கள் பருமனுக இருக்கும் பெண் கள் தினமும் கொஞ்சத் தூரம் நடந் தாலே போதும். கால்கள் ஒல்லியாகி விடும்.

எள்ளை உணவுடன் அடிக்கடி சேர்த் துக் கொள்ளுங்கள். எள் குடல் வறட்சியைக் குணமாக்குகிறது. எள் மூல நோயைக் குணமாக்குகிறது. குழந்தை பெற்ற தாய்மார்கள் எள்ளை உணவுடன் சேர்த்துக்கொண்டால் தாய்ப்பால் பெரு கும். கர்ப்பிணிப் பெண்கள் மட்டும் எள் ளைச் சாப்பிடக் கூடாது.

உதட்டுச் சாயம் போடும் பெண்கள் உதட்டுச் சாயம் பூசுவதை நிறுத்தி விட்டால் உதடுகள் பார்க்கச் சகிக்காது. உதடுகள் கறுப்பாகிவிட்டிருக்கும். இந்தக் கறுப்பு நிறத்தைப் போக்கத் தினமும் உதடுகளுக்குக் கிரீம் தடவவேண்டும். தொடர்ந்து பல நாட்களுக்கு ஈரல் சூப் செய்து சாப்பிட வேண்டும். அப்போது உதடுகள் சிவப்பாக மாறிவிடும்.

ஆப்பிரிக்காவில் உள்ள நீக்ரோப் பெண்களிடம் இப்படி ஒரு பழக்கம்: கணவன், தினசரி மனைவியிடம், ''உன் உடம்பு நன்ருக இருக்கிறதா?'' என்று கேட்கவேண்டும். இப்படிக் கேட்கத் தவறி ுைல், கணவனுக்குத் தன் மீது பிரியம் இல்லை என்று மனைவி, கணவனை விவாக ரத்துச் செய்து விடுவாள்.

கறிவேப்பிலையில் உயிர்ச் சத்து 'ஏ' ஏராளமாக உள்ளது. கறிவேப் பிலையைச் சட்னி செய்து அடிக்கடி உண வில் சேர்த்துக் கொள்ளுங்கள். கறிவேப் பிலை சட்னி கண்களுக்கு நல்லது.

வாழைக்காயைத் துண்டு துண்டாக வெட்டி வெய்யிலில் காயவையுங் கள். நன்ருகக் காய்ந்த பிறகு, பத்திர மாக எடுத்து வையுங்கள். இந்தக் காய்ந்த துண்டுகளை இடித்துத் தூளாக் கிச் சிறிது தண்ணீர் சேர்த்துக் காய்ச்சுங் கள். கூழ் போலக் காய்ச்சிச் சிறிது இனிப் புச் சேர்த்துக் கொள்ளுங்கள். இதை வள ரும் குழந்தைகளுக்குக் கொடுங்கள். குழந்தைகளுக்கு இது சிறந்த உணவு.

பெண்கள் தங்களுக்கு மாதவிலக் கின்போது வயிறு வலிப்பதாக நினை க்கிருர்கள். வெறும் நினைப்புத்தான் இது. மாதவிலக்கின்போது தங்களுக்கு வலி எடுக்காது என்று நினைக்கும் பெண்க ளுக்கு வலி எடுப்பதில்லை,

அசை போடுகின்றேன்

எஸ். பொன்னுத்துரை

நான் ஓர் இலக்கியக்காரன் என்பதிலே மட்டற்ற பெருமை பாராட்டுபவன். ஏனைய கவின் கலைகளிலும் பார்க்க, இலக்கியக் கலை உந்நத இடம் வகிக்கின்றது என்று சத்திய சம்பாவனை செய்யும் ஏமாப்பும் எனக்கு உண்டு.

இலக்கியத்தின் வண்ணமும், வகையும், வாய்ப்பும், வசதியும் எண்ணற்றவை. இந்தக் கவர்ச்சியை உணர்ந்து கொள்ளும் ஒருவனாலேதான் தன் வாழ்க்கையில் இலக்கியத்திற்கு முதன்மை அளிக்கும் பக்குவத்தினை வசப்படுத்துதல் சாத்தியம், இச்சாத்தியத்தைச் சாதனையாகப் பயிலுபவன் நான். எனவே, இலக்கியக் கலையை நான் எவ்வாறு தரிசிக்கின்றேன் என்பதைக் கூறும் உரிமையை எடுத்துக் கொள்ள முந்துகின்றேன்.

இலக்கியத்தின் வண்ணமும், வகையும், வாய்ப்பும், வசதியும் எண்ணற்றவை என்று ஏலவே சுட்டினேன். புதிய பாணிகளையும், பாவங்களையும், சுருதிகளையும் ஏற்றுக் கொள்ளும் நெகிழ்ச்சியும் இலக்கியத்திற்கு உண்டு.எனவே, மனித அநுபவத்தின் எல்லா அம்சங்களையும் மிக நுட்பமாக இலக்கியக் கலையிலே சித்திரித்தல் சாலும். மனித இயல்பின் எல்லாக் கோணங்களையும் கோலங்களையும் இலக்கியம் பிரதிபலிக்கின்றது. இது மனத் திருப்தி ஏற்படுத்தும் தன்மைத்து. இலக்கியத்தினை ஊடகமாகப் பற்றி பல்வகைச் சுவையை ஊட்டலாம். இசைப்பாக்கள் அழகு மயக்கம் ஊட்டலாம். துன்பியல் நாடகங்கள் மூலம் மனித குலத்தின் போராற்றலை மகிமைப் படுத்தலாம். நகைச் சுவை எழுத்துக்கள் மூலம் சிரிப்பு நல்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். அங்கதங்களிலே, மனித குலத்தின் கோரங்களையும் பலவீனங்களையும் சித்திரித்து நேர்மைச் சீற்றத்தின் ஆவேச நிலையை உருவாக்கலாம். உலகம் எவ்வாறு அமைதல் விரும்பத்தக்கது என்ற மாதிரியை வனைந்து, கற்பனைக் கருத்துவங்கள் மூலம் அத்தகையஉலகினைஉருவாக்கும் உறுதியை தோற்றுவிக்கலாம். உள்ளத்தின் பெருவிருப்புகளை அடைவதற்கான பேராசையை இலக்கியத்தின் மூலந் தூண்டலாம்,

இலக்கியத்திலே பல்வேறு குணவியல்புகளைக் கொண்ட பாத்திரங்களைப் படைக்கலாம். இலக்கியச் சுவைஞன் ஒருவன் தன்னுடைய நிறைவேறாத ஆசைகள், அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகள், உளவெழுச்சிகள் ஆகியவற்றை கற்பனையேயானாலும் இலக்கிய மயன் நிசம் என நம்பச் செய்யும் பாங்கத்திலே படைக்கும் பாத்திரங்கள் மீது ஏற்றி, எதை எதையோ இனங் காண்பதற்கு இலக்கியம் வசதி செய்கின்றது. இதனால் அவனுக்கு விடுதலை இன்பம் வந்து பொருந்துகின்றது. இதன் மெய்ம்மையை ரப்பராக இழுத்து, இலக்கியம் என்பது நிசவுலகிலிருந்து தப்புவதற்கான ஒரு சாதனம் என்ற அர்த்தத்தினை வலிந்து கொள்ளுதல் சவலைத்தனமானது. சிறந்த இலக்கியம் வாழ்க்கையை விரிவுபடுத்தவும் மேன்மைப்படுத்தவும் உதவுகின்றது. வாழ்க்கையை அதன் பல்வேறு நிலைகளிலும் கோலங்களிலும் காண்பதற்கு அது வசதி செய்கின்றது. நம்மாலே பார்க்கவோ, துய்க்கவோ இயலாத எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகளை இலக்கியத்திலே படித்து மகிழலாம். நம்முடைய சொந்த வாழ்க்கை எல்லைக்கட்டுடையது. ஆனால், மனித வாழ்க்கை நாம் அனுபவிப்பதிலும் பார்க்க அழகும் கவர்ச்சியும் உடையது. அந்த உபரியான அழகினையும் கவர்ச்சியையும் அனுபவிக்க இலக்கியந் துணை செய்கின்றது. இதனால் நமது சொந்த வாழ்க்கை மேம்படும் சந்தர்ப்பம் வாய்க்கின்றது. நமது வாழ்க்கையில் நாம் முன்பு

பரிசுக் கவிதை

மூன்றும் நீயே!

எப்ரல் இதழ் அட்டைப் படத்துக்குரிய கவிதைகளில் முதற் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை.

கலசம் நிறைந்த செல்வமாய்
கல்வி, வீரமும் ஊட்டிறை!
குலவும் எழிலாம் கொழித்திடக்
குங்குமக் கரமதில் கொட்டிடும்;
பலவாம் பொன்னும், வைரமும்
பரிந்த ளித்தாய்! என்றுமிவ்
வுலகம் செழித்து வாழ்ந்திட
உணவும் ஊட்டி வென்றனையே!
ஒன்றாய் நின்று ஒன்றனையன்று
ஒவ்வொன் றிற்கும் நீயே தாயாய்
நின்றாய்! நின்றும் செய்தாய் தேவி
நினைக்கின்ற போதில் வீரத்தினையும்
நன்றாய் ஊட்டி, வேண்டுதலிதயம்
நனைந்திடச் செல்வம் கொடுத்துமே
உன்றனைப் படித்திடக் கல்விபகிர்ந்து
உலகில் மூன்றாய் முக்திபெற்றாய்!

—நவாலியூர்க் கவிராயர்.

93/2, பீச் ரோட், யாழ்ப்பாணம்.

பெற்றிராத புதிய வாய்ப்புகளைப் பெறுவ தற்கும், புதிய ஆற்றல்—ஆர்வம்—அழகு முதலியவற்றைத் துய்ப்பதற்கும் இலக்கி யம் உதவும். மேலும், நமது அனுதாபங் களையும், உணர்வுகளையும், கற் பனைகளையும் விரிவுபடுத்துவதற்கு இலக்கியம் வாய்ப் பளிக்கின்றது.

இவ்வாறு இலக்கியக் கலையின் ஆற் றலைப் புரிந்து வைத்திருக்கும் நான், கடந்த கால் நூற்றாண்டு காலமாக இலக் கிய உலகில் மாடாக உழைத்து வருதல் எஸ்.பொ.சுவைஞருக்கு வியப்பினை ஊட் டாது. என்னை 'ஒருக்கா தொட்டுவதால், தாங்களும் எழுத்தாளர்களாக உயர்ந்து விடலாம்' என்ற 'தப்பிலி'த் திருத் தொண்டு இயற்றும் பூர்வஜன்ம அகஸ்தீன் கள் என்னைச் 'செக்கு மாடு' என அழைக்க முந்தலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை. இலக்கியம் என்ற செக்கையே சுற்றிக் கொண்டிருந்த மாடு என்று அர்த்தப்படுத் திக்கொள்ள எனக்கு உரிமை இருக்கிறது.

இனி, என்னுடைய—எஸ். பொ.என்ற சுயத்துடைய—அசைபோடுதல் ஆரம்ப மாகின்றது...

அன்பளிப்பு

நலன் விரும்பி

கல்கிசை.

கதை அளந்தவருக்கு ஒரு கதை

ஓர் ஊரில் ஒரு ஓவியன் இருந்தான். அவன் தனது லட்சுமிக் கலசமான பெண் ஓவியத்தைக் காட்சிக்கு வைத்தான்.

'இந்த ஓவியத்தில் குறை ஏதாவது உண்டானால் அதைக் கண்டு சொல்பவர்களுக்கு 500 ரூபாய் சன்மானம் தருவேன்' என்று ஒரு விளம்பரமும் எழுதிப் போட்டு விட்டுப் பக்கத்திலேயே நின்றான் அந்த ஓவியன்.

அழகான அந்த ஓவியத்தின் கலை நுணுக்கத்தைக் கண்டு அனைவரும் புகழ்ந்து கொண்டே சென்றார்கள்.

அறிவுலக மேதைகள், ஆய்வாளர்கள், ஆக்க இலக்கியக்காரர்கள், கலை விற்பன்னர்கள் ஆகிய இத்தியாதிப் பிரமுகர்கள் எல்லாம் ஓவியனைப் புகழ்ந்து கொண்டே சென்றார்கள்.

அந்தக் கூட்டத்தில் ஒரு நோஞ்சான் வந்தான். கசங்கிய சேட், தொய்ந்த ட்டவுசர், பரட்டைத் தலையோடு ஒரு பக்கமாகப் பார்த்துக் கொண்டு வந்த அவன், ஓவியத்தைப் பார்த்து விட்டுப் பிரமித்துப் போனான்.

கலை, இலக்கியத் துறையில் சுத்த அறிவு சூனியனான அவன் தன்னை ஒரு துரையாக நினைத்துக் கொண்டு, ஓவியத்தைப் பார்த்தான்,

''ஐயா இந்த ஓவியப் பெண்ணின் செருப்பு நாடா சற்று நீண்டு இருக்க வேண்டும்'' என்று ஈனசுரத்தில் தலையைச் சொறிந்து கொண்டு கூறினான் அவன்.

ஓவியன் தனது படைப்பைக் கூர்ந்து பார்த்துவிட்டு, உண்மையை ஒப்புக்கொண்டு அவனுக்கு 500 ரூபா சன்மானத்தை அளித்துப் பாராட்டினான்.

இதனால் அவனுக்கு மண்டைக் கனம் தலைக்கேறிவிட்டது. ஆகவே, தனது முட்டைக் கண்ணைச் சுழற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'ஓவியப் பெண்ணின் சிரசு கொஞ்சம் வளைந்து இருக்க வேண்டும்' என்றான்.

அவன் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்த ஓவியன், ''நீர் என்ன வேலை செய்கின்றீர்'' என்று கேட்டான்.

'நான் செருப்புத் தைப்பவன்' என்றான் நோஞ்சான்.

'அப்படியா...?உன் புத்தியைச் செருப்போடு வைத்துக் கொள். சிரசிற்குப் போகாதே!' என்றான் ஓவியன்.



ALWAYS ASK FOR

EAGLE
BRAND

25 lbs SEMOLINA

(RULANG)

NEW KIRUPA STORES,

Dealers For Cake Ingredients

236, Bankshall Street,
COLOMBO.

T'Phone: 34103.

Branch:

23, Gabos Lane,
COLOMBO-11.

T'Phone: 27900.



சோபனா

இத்தாலிய தேசத்து ஜன நெருக்கடி நிறைந்த வீதி ஒன்றில் பஸ் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்குள் இருந்த பெண்களின் உடலை ஆடைக் குறைப்பு நாகரிகம் அணி செய்கின்றது.

அந்த மங்கைகளில் ஒருத்தி பேரழகி. அழகின் பிம்பமாக அமர்ந்து இருக்கிறாள் அவள். அந்த நங்கை அணிந்து இருந்த மினிஸ்கேட்டுக்கு வெளியே அவளது அழகிய கால்களில் முக்காற் பகுதி தெரிகிறது.

எதிரே இருந்த இளைஞன் ஒருவனின் மனதை அந்தக்கால்களின் அழகு சுண்டி இழுக்கின்றது. அவனது உணர்ச்சி எல்லை மீறுகிறது. 'லபக்'என்றுபாய்கிறான் அவள் மீது..அவளை இறுக அணைத்து முத்தங்கள் சொரிகிறான்.

ஐயோ என்று அலறுகிறாள்அவள்.பஸ்ஸுக்குள் ஒரே கலாட்டா.அதற்குள் இருந்த அத்தனை கைகளும் அவனைப்பதம் பார்க்கின்றன. அவனது பெயர் ஜெப்ரட்டோ. மிரூக்கி என்பது அந்த அழகியின் பெயர்.

தன்னுடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைத்ததாகக்கூறி அவனுக்கு எதிராக இத்தாலிய நீதிமன்றம் ஒன்றில் மான நஷ்ட வழக்குத் தொடர்கிறாள் மிரூக்கி. வழக்கை விசாரணை செய்த நீதி அரசர் டொராண்டோ ஜெப்ரட்டோவுக்கு இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

இளங் கவர்ச்சியைப் பார்வைக்கு தாக்கும் வகையில் நாகரீக மணிகள் அணியும் ஆடைகளினால் அவர்களை எதிர்நோக்கும் ஆபத்துக்கள் அநேகம்.

டோக்கியோ நகரில் பொலீசார் அண்மையில் ஆராய்ச்சி ஒன்றை நடாத்தி இருக்கிறார்கள். ஜப்பானில் பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதற்கான காரணங்களைக் கண்டு பிடிப்பது தான் அந்த ஆராய்ச்சி நடத்தப் பட்டதன் நோக்கமாகும்.

பெண்களின் முழங்கால்களுக்கு மேல் ஆடைகள் உயர உயரப் பாலியல் குற்றங்களும் ஜப்பானில் அதிகரிக்கின்றன என்று அவர்கள் தமது ஆராய்ச்சியை அடுத்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள்.

1971 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப் பகுதியில்



2627 பலாத்காரச் சம்பவங்கள் ஜப்பானில் நடைபெற்றுள்ளன.

இந்தக் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட இளைஞர்களில் பெரும் பகுதியினர் யுவதிகளின் வாளிப்பான கால் அழகில் மயங்கியே அவர்கள் மீது தாம் பலாத்காரம் பிரயோகித்ததாகத் தெரிவித்தார்கள் என அந்த அறிக்கையில் மேலும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உலகில் இன்று பெருகி வரும் கொலை, கொள்ளை, பாலியல் குற்றச் சம்பவங்களில் ஆடைக் குறைப்பு நாகரீகத்துக்குப் பெரும் பங்கு உண்டு என்பது பல்வேறு நாடுகளிலும் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதனால் தான் அண்மையில் ஆபிரிக்காவிலுள்ள மாலாவி நாட்டில் குட்டைக் கவுண், கட்டைப் பாவாடை ஆகியன அணிவதைத் தடைசெய்யும் சட்டம்ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் பாலுணர்ச்சியைத் தூண்டும் பாஷன்களின் பிறப்பிடங்களான ஹாலிவூட்டிலும், பாரிஸிலும் இந்த நாகரிகம் மின்னல் வேகத்தில் முன்னேறி வருகிறது அணியும் ஆடையின் அளவு எவ்வளவு சிறிதாக உள்ளதோ அதை ஆயிரக்கணக்கான டாலர் கொடுத்து வாங்க அந்த இடங்களில் நங்கையர்கள் இருக்கிறார்கள்.

ஹாலிவூட்டில் ஆடை தயாரிப்பாளர் களில் ஒருவரான மாக்ஸ் வெல் என்பவர் ஆறு அங்குலம் மட்டும் நீளமுள்ள துணி ஒன்றில் உடை ஒன்றைத் தயாரித்தார். அதனால் பெண்கள் தமது பெண்மையை மட்டுமே மறைக்க முடியும்.

ஹாலிவூட்டில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் அவர் தாம் தயாரித்த உடையைக் காட்சிக்கு வைத்தபோது இரண்டு லட்சம் டாலர் கொடுத்து அதை வாங்கி இருக்கிறாள் திருமதி ராபர்ட்வைட் என்ற ஒரு சீமாட்டி. வேறு எந்தத் தேசத்துப் பெண்ணும் செலவழிக்காத அளவு தமது பெண்மைக் கவர்ச்சியை உயர்த்திக் காட்டுவதற்கு அமெரிக்கப் பெண்கள் செலவிடுகிறார்கள் என்று கூறப்படுவதை இந்தச் சம்பவம் நிரூபிக்கிறது அல்லவா?

பாரிஸிலும் ஹாலிவூட்டிலும் ஆடைக் குறைப்பு நாகரீகம் நாளுக்கு நாள் முன்னேறுகிறது என்று கூறுவதைவிட வினாடிக்கு வினாடி முன்னேறுகிறது

என்று கூறுவதே பொருந்தும். அதனால் தான் பாரிஸில் புது வித ஆடை ஒன்றை அணிந்தால் ஓடிச் செல்லவேண்டும் என்று வேடிக்கையாகக் கூறப்படுகிறது. அடுத்த வினாடியே அது ''அவுட் ஆப் பாஷன்'' ஆகிவிடுகிறது என்பதைக் காட்டவே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

இந்த நாகரீகம் எமது நாட்டையும் ஆக்கிரமித்துள்ளது நமது வீதிகளில் அது அநாயாசமாகப் பவனி வருகிறது. எமது யுவதிகள் உடல்காட்டும் உடை அணியத் துடித்துக்கொண்டிருக்கையில் பாரிஸைச் சேர்ந்த வரும் பாஷன் உலகில் பெரும் புகழ் பெற்றவருமான பக்கோரபேன் என்பவர் என்ன கூறுகிறார் தெரியுமா?

''சேலைகட்டிய மாதரின் அழகே அழகு. சேலை அணிந்து இருக்கும் போது மட்டும் தான் ஒரு பெண் அழகாய் இருக்கிறாள். வேறு வகையிலான உடைகள் எல்லாம் வெறும் ஏமாற்று வேலை'' என 33 வயதினரான ரபேன கூறுகிறார்.

டோரிஸ் பிளின் என்ற அமெரிக்கப் பெண்மணி மூன்று ஆண்டுகள் இந்தியாவில் குடித்தனம் நடத்தியவர். அங்கு அணியப்படும் ஆடைகளைப் பற்றி 'காஸ்டியூம்ஸ் ஆப் இந்தியா' என்று தாம் எழுதிய ஒரு நூலில் விபரித்துள்ளார் அவர். இந்தியப் பெண்களின் சாரியைப் போல அழகு தரும் ஆடை உலகில் எங்குமே கிடையாது என அவர் அதில் கூறியுள்ளார்.



காதலி: இருதயமாதம் கொண்டாடுகிறார்களே இனியாவது, நீங்கள் சிகரட் குடிப்பதை நிறுத்தக் கூடாதா?

காதலன்: கவலைப்படாதே கண்ணே, என் இருதயத்துக்கு ஒன்றும் நடந்து விடாது.

காதலி: அதைப்பற்றி யார் சொன்னது? என்னுடைய இதயம் உங்களிடம் அல்லவா இருக்கிறது. அதுதான்...



இவரை நான் சந்தித்தேன்

பிரஞ்சு நாட்டு நாவலாசிரியர் எமிலி சோலாவை யதார்த்த வாதி என்று கூறுவார்கள். உள்ளதை உள்ள படி அப்படியே சிருஷ்டித்து விடும் இவரது நாவல்கள் உலகப் புகழ் பெற்றவைகளாகும்.

சோலாவின் கதாபாத்திரங்கள் அனைத்தும், பிரஞ்சு நாட்டின் சந்திகளில் வாழும் விபச்சாரிகளின் வாழ்க்கையையே படம் பிடித்தன என்றும், அவர் ஒரு அப்பட்டமான ஆபாச எழுத்தாளர் என்றும் கூறுவர்.

'ஒரு எழுத்தாளன், கற்பனை உலகில்தான் வாழ வேண்டும் என்பது என்ன, நியதியா? அவனது சம்பவக்கோர்வை, பாத்திரச் சிருஷ்டிகள் ஏன் அவன் வாழும் சமுதாயக்களமாக இருக்கக் கூடாது? என்று கேட்டவர் சோலா. அவரது வாழ்க்கையில் நடந்த உண்மையான ஒரு நிகழ்ச்சியையே நீங்கள் இங்கு படிக்கப்போகின்றீர்கள். — அந்த உண்மை நிகழ்ச்சி இதுதான்.

சோலா ஒரு சிற்றுண்டிச் சாலையில் அமர்ந்து தனது ஓவிய நண்பன் ஒருவனுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது, வெளியே பல பெண்களின் கூக்குரல் ஓசை கேட்டு, யன்னலால் எட்டிப் பார்த்தார்.

அங்கும், இங்குமாகப் பல பெண்கள் அலறி ஓடிக் கொண்டிருந்தார்கள். ஒரு விபச்சாரக் கும்பலைப் பிடிக்கப் போலீசார் பெரும் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்.

அந்நேரம் அழகிய இளம் பெண் ஒருத்தி, தப்பிக்க முயன்றவளாக சோலா அமர்ந்திருந்த அறையுள் நுழைந்து திரைச்சீலைக்குள் ஒளிந்துகொண்டாள். அவளது உடல் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தது.

சோலா அவளைத் தன்னருகே வரும்படி அழைத்தார். அப்போது சில போலீசாரும், அந்த அறைக்குள் நுழைந்து விட்டனர். ' இவள், நீங்கள் தேடி வந்த பெண் அல்ல. இவள் எனது உறவினள். என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார் சோலா.

அவள் சோலாவை நன்றியுடன் நோக்கினாள். அவளுக்குச் சிறிது வைனும், ரொட்டிகளும் வரவழைத்துக் கொடுத்தார். பின் அவளது அந்த நிலைக்குரிய காரணத்தை அவர் வினவிய போது, அவள் தனது உண்மைக் கதையை ஒளிக்காமல், மறைக்காமல் அப்படியே கூறினாள்.

அவளது சோக வரலாற்றைக் கேட்ட சோலாவின் உள்ளமும் வேதனைப் பட்டது. அவளது அவல வாழ்க்கையை அப்படியே எழுதத் தொடங்கினார். அந்தக் கதை தான் உலகப் புகழ் பெற்ற எமலி சோலாவின் ''நா நா'' என்ற நாவலாகும்.

இவ்வாறே, உண்மைச் சம்பவங்களை வைத்துக் கொண்டு, கதை எழுதிப் புகழ் பெற்றார்கள் பலர்.

அவர்கள் மட்டுமா அந்த உண்மைக் கதாபாத்திரங்களைச்சந்தித்தார்கள்? நமது நாட்டில் நாம் உண்மையில் சந்தித்து உரையாடிய கதாபாத்திரங்களின் உண்மைக் கதைகளைத் தான் இந்தப் பகுதியில் நீங்கள் படிக்கப் போகின்றீர்கள்! அடுத்த இதழ் வரை பொறுத்திருங்கள்

--பவானி சண்முகம்.-

ஆராய்ச்சி

தமிழர் சொற் புழக்கத்தின் பழமொழிகளிலொன்றாக அறிமுகமாகிய அறிவுரையே, ''கல்லான் ஆனாலும் கணவன் புல்லன் ஆனாலும் புருஷன்'' எனும் பொன் மொழியாகும்.

இப் பழமொழியின் சொற் பிரயோகம், நாளடைவில் ஓரிரு சொற்களைச் சுருக்கிக்கொண்டு திரிபடைந்ததால்தான் கல்லான் (கல்வியறிவில்லாதவன்) கல்லாகவும், புல்லன் (பகைவன்) புல்லாகவும் மாறி ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' எனும் புது மொழியாயிற்று.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷனா

திரிபடைந்த பழமொழிக்கேற்பவே, கல் மனமுடையவனானாலும் கணவன்—புல்லைப்போன்ற மெல்லிய உருவ மன மென்மையுடையவனானாலும் புருஷன் என அதன் கருத்தும் திசை மாறியது.

கல்லைக் கணவனாகவும் புல்லைப் புருஷனாகவும் வரித்து வாழ்ந்த வனிதையரைப் பற்றிய கதைகளும் புராணங்களில் இல்லாமலில்லை. ஆனாலும் அக் கதைகளும் நல்லதொரு அடிப்படையில் ஏதோ ஒரு நற்கருத்தைக் கொண்டதாகத் தானிருக்கு மென்பதைப் பகுத்தறிவால் உணர்ந்து பார்த்தால் நிச்சயம் புரியும்.

கணவனே கண் கண்ட தெய்வம் என்பதற்கேற்ப, தொட்டுத் தாலி கட்டியவன் எப்படிப்பட்டவனானாலும் மதித்து இல்வாழ்க்கையில் ஈடுபடுவதே கற்பரசிகள் கடமை என்பதை, ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' எனும் பழமொழியின் கருத்துஉணர்த்தினாலும், புராணங்களில் புதையுண்டிருக்கும் புதையல்நிகர் கருத்துக்களைப் போலவே, நாளடைவில் நம்மத்தியில் திரிபடைந்த பல பழமொழிகள் வரிசையில் இந்தப் பழமொழியும் இடம் பெற்றுவிட்டதென்றே எண்ணத் தோன்றும். எக் காலத்துக்கும் ஏற்றதான இதன் கருத்து:

கல்லான்+ஆனாலும் — கல்லானானாலும்.

புல்லன்+ஆனாலும்—புல்லனானாலும்.

என்ற அடிப்படையிலேயே அமைந்த அறிவுரையாகும்.

கல்லானானாலும் (கல்வியறிவில்லாதவனானாலும்) கணவன், புல்லனானாலும் (பகைவனானாலும், ஈவிரக்கமற்ற போக்கிரியானாலும்) புருஷன் எனும் பழமொழியே நம் முன்னோரளித்த பொன்மொழியாகும் என்பதில் சந்தேகமேயில்லை. ●

யாழ். வேல்வேந்தன்

கலசம்

30, லீ அவனியூ, கொழும்பு. 3.

சந்தாப் பத்திரம்.

அன்புடையீர்,

இத்துடன் நான் இணைத்துள்ள விவரங்களை ஏற்றுக்கொண்டு என்னையும் ஒருசந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பெயர்: ....

முகவரி: ....

....

....

ஒரு வருடத்துக்குரிய சந்தாப் பணம் 6.00 ரூபாவை இத்துடன் மணி ஓடர், போஸ்டல் ஓடர் (இல:) அனுப்பி வைக்கின்றேன்.

....

திகதி ஒப்பம்.

விலாச மாற்றங்கள் உடனுக்குடன் அறிவிக்கப்படவேண்டும்.

மணி ஓடர் போஸ்டல் ஓடர்கள், The Manager, KALASAM—என முகவரியிடப்படவேண்டும்.

அலுவலக உபயோகத்திற்கு

கலசம்

30, லீ அவனியூ, கொழும்பு 3.

பற்றுச் சீட்டு.

திரு..

அவர்களிடமிருந்து..மாதம் தொடக்கம்

....மாதம் வரைக்கும் உரிய சந்தாப் பணமாக ஆறு ரூபாவை மணி ஓடராகப், போஸ்டல் ஓடராகப் (இல:) பெற்றுக்கொண்டேன்.

நன்றி.

....

திகதி நிர்வாகி.

காலத்தைச் சிரித்தே கழி கவலையைத் தீர்க்க அதுவே வழி!



இனிய கவிதை உலகில் 25 வருடங்கள் வாழ்ந்து, எண்ணற்ற கவிதைகளை எழுதிக் குவித்தார் காவியத் தலைவியின் இளைய மகன். கவிஞர் கண்ணதாசன்.

இன்று வெள்ளி விழாக் கொண்டாடி மகிழும் கவிஞர் கண்ணதாசனின் புதிய சிந்தனைகளை நமது வாசகர்களுக்கு, விசேஷ விருந்தாகப் படைக்கின்றோம். (ஆ—ர்)

கண்கள் துயில்கின்றன
கவலைகளும் துயில்கின்றன.
கண்கள் விழிக்கின்றன.
கவலைகளும் விழிக்கின்றன.

விழித்து விழித்துத் தூங்குபவனுக்குப் பெயர் மனிதன்.

விழிக்காமல் தூங்குபவனுக்குப் பெயர் பிணம்.

விழிப்பில்லையேல் கவலையில்லை!

விழிக்காமல் வாழ்வது எப்படி?

கதையில் வரும் கும்பகர்ணனைப் போல் தூங்கிக்கொண்டே வாழ்ந்து விடுவதா?

இல்லை-

நீ விழி.

விழித்தவுடன், கவலையை மட்டும் தனியாகத் தூங்கவைத்துவிடு.

அதெப்படி தனியாகத் தூங்கும்?

எதற்காக நீ கவலைப்பட வேண்டியிருக்கிறதோ, அதற்கும் உனக்கும் தொடர்பு இல்லை என்று விட்டுவிடு.

அது பசியாக இருந்தால்...?

கவலைப்படாதே வேலை தேடு!

வேலை கிடைக்கவில்லையென்றால்...?

வேலை கொடுக்க வேண்டியதை மறந்து—இல்லை மறுத்து, தூங்குகிறானே சோஷலிச விரோதி அவனிடம் சென்று உழைப்பதற்கு வாய்ப்புத் தரச் சொல்.

அவன் யார்?

அவன்தான் கள்ளப்பணத் திருடன்.

அவன் தர மறுத்தால்...?

''முதலாளித்துவம் ஒழிக! கள்ளப் பணம் ஒழிக!—'' என்று முழக்கம் செய்.

அவன் பொலீசில் பிடித்து ஒப்படைத்தால்...?

சிறைச்சாலைக்குப் போ!

ஓரளவுக்காவது பசி தீர்ந்துவிடும்!

இதென்ன தத்துவம்?

வேறு வழி?

அத்தனையும் முரண்பாடல்லவா?

வறட்சித் தத்துவம் இருக்கும் வரை

யில், வாழ்க்கைத் தத்துவமும் முரண்பட்டுத்தான் ஆகவேண்டும்!

நீங்கள் கவலையைத் தீர்க்க வழி சொல்லவில்லை. ஏழைகளெல்லாம் சிறைக்குப் போக வழி சொல்லுகிறீர்கள்.

நான் வேறொன்றைச் சொல்லியிருக்கவேண்டும். அதற்குப் பதிலாக இதைச் சொல்லுகிறேன்.

என்ன அது?

புரட்சி செய்யச் சொல்லி இருக்க வேண்டும்.

சரிதான்; இது அதைவிட நல்லது!—எல்லோரையும் சாகச் சொல்லுகிறீர்கள்.

ஆமாம்! இந்த முயற்சியில் மடிந்துவிட்டால்...விட்டால்...நான் சொல்ல வருகிற தத்துவம் முடிந்துவிடுகிறது—கவலையில்லாத வாழ்வு சமாதியிலே கிடைக்கிறது!

அந்தந்த வேலைத் தேவைகள் பூர்த்தியாகிக் கவலை தீராதோ?

யுமைப்பதே சரியென்று எனக்குத் தோன்றுகிறது!

பாரதி கூடக் காதல் போயின் சாதல் என்றுனே?...

ஆமாம்!—அதனுல்தான், காதலை விட்டு விட்டுச் சாதலே நடந்துகொண்டிருக்கிறது.

கொஞ்சம் நிதானித்துச் சொல்லுங்கள்!...ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் இருந்து வரும் தத்துவம். ஒருவன் கூடப் பாக்கியில்லாமல் ஒப்புக்கொண்ட தத்துவம். காலமெல்லாம் எடுத்துச் சொல்லி இன்புற்ற தத்துவம். நீங்கள் ஒருவர் தான் ஒரு காதல் போயின் மறு காதல் என்கிறீர்கள்.

உண்மைதான்! நான் சிலரைச் சாவிலிருந்து மீட்க முயல்கிறேன்.

சாகாமல் இருந்தாலும் கவலை தானே?

அந்தக் கவலையைத் தீர்க்கத்தானே மறு காதல்!

எனக்குச்சிரிப்பு வருகிறது.

வருகிறதல்லவா? அதை வரவழைக்கத்தானே தத்துவத்தைத் தலைகீழாகப் புரட்டுகிறேன்.

விரைவில் சோஷலிசம் வந்துவிடும். பிறகு கவலை தீர்ந்துவிடும்.

சரி போகட்டும்; வருகின்ற கவலை, காதல்க் கவலையாக இருந்தால்...?

எனக்கென்னவோ , காதலைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பது முட்டாள்தனம் என்றே தோன்றுகின்றது!

ஐயையோ! பழைய காவியங்களின் கதி என்ன?

அவை காவியங்களாகவே இருக்கட்டும். ஏன் நம் வாழ்க்கையை வந்து முட்ட வேண்டும்?

இதைச் சொல்வது முட்டாள் தனமாகப் படவில்லையா?

இல்லை! ஏடுகளில் தினமும் வரும் செய்திகளைப் பார்க்கும்போது, பழைய காதல் தத்துவங்களைக் கொஞ்சம் மாற்றி

மொத்தத்தில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மனிதன் எதற்கும் கவலைப்படக் கூடாது. பிறந்துவிட்டோம். சாவு என்னவோ?...வரத்தான் போகிறது. இடையில் உள்ள காலத்தைச் சிரித்தே கழிக்க வேண்டும். ஒரு நாள் ஒரு பொழுது கூட எந்தக் கவலையும் உன்னைத் தீண்டக் கூடாது. அதற்காகத்தான் இவ்வளவும் சொன்னேன்.

மகிழ்ச்சி!

ஆமாம்...நீங்கள் எங்கே இப்படிப் புறப்பட்டு விட்டீர்கள்?...

ஒன்றுமில்லை—போன மாதம் செலவு அதிகமாகி, ஆயிரம் ரூபாய் கடன் ஏறிவிட்டது. மனதுக்கு ஒரே கவலையாக இருக்கிறது. உலாவி வரலாமென்று போகிறேன்.

உள்ளம் திறந்தது

த. சபாரத்தினம்

சங்கு சேமக்கலம் முழங்கிக்கொண்டிருந்தது. கூலிக்குப் பிடிக்கப்பட்ட கந்தையா கோஷ்டியினர் சற்று முன்பு குடித்த தென்னங் கள்ளின் உசாரினால் தேவாரத்தை உரக்கப் பாட ஆரம்பித்தனர். பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் நின்ற சிவக்கொழுந்து மெதுவாகக் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து அருகில் சென்று அரையில் கட்டியிருந்த சால்வையை அவிழ்த்து உதறி விரித்துத் தோளில் போட்டுக்கொண்டு பாடையின் முன்பக்கத்து வலது கோடிக்கம்பை வாங்கித் தன் தோளில் வைத்துச் சுமக்க ஆரம்பித்தார்.

பாடைக்கு முன்னால் கொள்ளிக் குடத்துடன் சென்று கொண்டிருந்த சிவலிங்கத்திற்குச் சுருக்கென்றது. 'உன்னை ஒழிச்சுக் கட்டிவிட்டுத்தான் மற்றவேலை' என்று கங்கணம் கட்டிக்கொண்டு தன்னுடைய சொந்தச் சகோதரரின் வீட்டுப் படலையைத் திறக்காமலிருந்த சிவக்கொழுந்துச் சித்தப்பா, செத்தவீட்டுக்குக் கூட வராமல் இருந்துவிட்டு இப்பொழுது யாரோ பிறத்தி மனுஷனைப் போல வந்து பிரேதத்தைச் சுமக்க ஆரம்பித்தால் நெஞ்சு சுருக்கிடாதா? சித்தப்பா திருந்திவிட்டாரா? சகோதர பாசத்தைக் கூட மறைத்த அந்தச் சாதி வெறி குறைந்துவிட்டதா?

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு அந்த முழு நிலவு இரவில் நடந்த சம்பவத்தை நினைத்ததும் நெஞ்சு மட்டுமல்ல உடலே நடுங்கியது சிவலிங்கத்திற்கு. சுப்பையாவின் தேத்தண்ணிக் கடையில் வாங்கிய கள்ளச் சாராயத்தையும், முருகன்ரை கொட்டிலிலை வாங்கிய கள்ளையும் கலந்து குடித்துவிட்டுத் தள்ளாடியபடியே வந்த சிவக்கொழுந்துச் சித்தப்பா. "டேய் சிவலிங்கம்! வாடா வெளியாலை. உன்னைக் கொண்டு போட்டுத்தான் மறுவேலை" என்று கத்தியபடியே கிழுவம் கதியாலை எட்டி முறித்த சம்பவத்தை அவனால் எப்படித்தான் மறக்க முடியும்? சாதி வெறி பிடித்த சமூகத்தின் பார்வையில் சிவலிங்கம் செய்துவிட்டது மிகவும் மோசமான காரியம்தான். மற்ற வெள்ளாளப் பெடியன்களைப் போல சாதியைப் பாராமல் காதலித்துப் போட்டு கல்யாணம் என்று வந்ததும் அப்பா அம்மா சொற்படி உயர்ந்த சாதிக் குடும்பத்திலை போய்ச் சீதனத்தோடு அவன் பெண் எடுக்கவில்லை. பள் சின்னான்ரை மகள் சிவகாமியை அவன் காதலித்தான். ஒருநாள் காலையில் அவளையும் கூட்டிக்கொண்டு தன்னுடைய வீட்டுக்கு வந்து விட்டான்.

"தம்பி! இதென்ன காரியத்தையடா செய்தனி?"— அழுது புலம்பினாள் சிவலிங்கத்தின் தாய். "ஊர் இதை ஏற்குமா?"

"அம்மா! நீங்கள் ஊரைப் பற்றிக் கவலைப் படாதையுங்கோ. நீங்கள் சிவகாமியை உங்கடை மருமகளா ஏற்கிறீர்களா இல்லையா? ஏற்க விருப்பமில்லை எண்டால் சொல்லுங்கோ. நான் அவளைக் கூட்டிக்கொண்டு எங்காகிலும் போயிடுறன்."— சிவலிங்கத்தின் வார்த்தைகளில் உறுதி தொனித்தது.

"நான் என்னடா செய்யிறது உன்ரை கொப்பர் என்ன சொல்லுறாரோ? எப்படித் துள்ளுறாரோ!" சிவலிங்கத்தின் முதுகிற்குப் பின்னால் ஒட்டிக் கொண்டு நின்ற சிவகாமியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள் சிவலிங்கத்தின் தாய். "வடிவான பிள்ளை" யென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் அவள்.

சிவலிங்கத்திற்கு ஓரளவு தைரியம் வந்தது. 'அம்மா ஏற்றுக் கொண்டா, அப்பாவைப் பற்றிக் கவலையேயில்லை. மேடை மேடையாய் ஏறிச் 'சாதியிரண்

டொழிய வேறில்லை’ என்று முழங்கு பவரல்லவா அவர்’’ என்று எண்ணிக் கொண்டான்.

மகனின் செய்கையைக் கேட்டதும் கந்தையா பிள்ளைக்கு மனச் சஞ்சலம் ஏற்படத்தான் செய்தது. எவ்வளவுதான் வாயால் வரவேற்றாலும் சொந்த வீட்டில் அது நடக்கும் போது என்னவோ மாதிரி இருப்பது இயல்புதானே. என்றாலும் ‘நான் சமுதாய வளர்ச்சியை வேண்டி நின்றேன். என்னுடைய மகன் சமுதாயப்

திற்கு வந்து விட்டார் சிவக் கொழுந்துச் சித்தப்பா.

‘‘நில்லடா அங்கே. இனிமேல் ஒரு அடி கூட முன்னுக்கு எடுத்து வைக் காதை. நான் வாயால் சொன்னதை என்ரை மோன் செயலில் காட்டிவிட்டான். அதிலை என்ன தப்பு?’’ உடுத்தியிருந்த எட்டு முழ வேட்டியைச் சண்டிக் கட்டாக மடித்துக் கட்டியபடியே சிவக் கொழுந் தை வழி மறித்தார் கந்தையா பிள்ளை.

‘‘என்ன அண்ணை அவனுக்கு நீயும்



புரட்சியையே செய்து விட்டான்’ என்று மட்டும் சொல்லி விட்டுப் பேசாமல் இருந்து விட்டார்.

சாதி வெறியர்கள் சும்மா இருக்க வில்லை. சிவக் கொழுந்துவைத் தூண்டி விட்டனர். ‘டேய் அந்தப் பெட்டையைக் கொண்டு போய் விட்டு விட்டு வாடா. அல் லாவிட்டால் இந்தக் கிழுவங் கட்டையாலை பாம்பை அடிக்கிறப் போல அடிச்சுப் போடுவேன்’ கிழுவம் கட்டையை உயர்த்திப் பிடிக்க முடியாமல் முற்றத்

உடந்தையா? எங்களுடைய மதிப்பும் மரியாதையும் என்னாகிறது’’ — வார்த் தைகள் தடக்கித் தடக்கி வெளி வந்தன சிவக் கொழுந்துவிற்கு.

‘‘எங்கடை குடும்பத்திற்கு இதுவரை என்ன மதிப்பும் மரியாதையும் இருந் தன? ஏழையாய்ப் பிறந்தோம். ஏழை யாய் வாழ்ந்தோம். இதுவரை எவரும் எங்களைக் கவனிக்கவுமில்லை; பொருட் படுத்தவுமில்லை. இனி மேல் தான்— அதுவும் என்ரை மகனின்ரை செயலால்

தான் — எங்களுக்கு மதிப்பும் மரியாதையும் வரப்போகிறது. என்ரை மகன் சரியான வழியில் செல்கிறான். நீ விருப்பமெண்டால் அவனை ஆசிர்வதி. விருப்பமில்லாவிட்டால் அதோ இருக்கிறது படலை.''

கந்தையாபிள்ளையை எதிர்க்கும் துணிவு சிவக்கொழுந்திற்கு வரவில்லை. ''இனிமேல் இந்தப் படலையையே திறக்க மாட்டன்.'' என்று சொல்லிக் கொண்டு போனவர் போனவர்தான்.

ஒழுங்காக அடுக்கிய விறகின் மேல் பிரேதத்தைத் தூக்கி வைத்தார்கள். ''தம்பி! வாய்க்கரிசி போடச் சித்தப்பாவைக் கூப்பிடு'' — சிவலிங்கத்தின் காதுகளில் யாரோ ஓர் உறவினர் குசுகுசுத்தார். அவன் சிறிய தகப்பனாரை நோக்கி நடந்தான் ''சித்தப்பா.........'' அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. அவரின் கைகளை இறுகப் பற்றியபடியே அழ ஆரம்பித்தான்.

சிவக் கொழுந்தும் விக்கி விக்கி அழுதார். ''என்னை மன்னித்து விடு தம்பி.'' அவர் குரல் கரகரத்தது. ''அண்ணா போதித்தார். நீ செய்து காட்டினாய்......... நான் உங்களின் இலட்சியம் நிறைவேற ஓர் இயக்கத்தையே நடத்தப் போகின்றேன்.''

சிங்க நடனம்

சிங்க நடனம் என்ற ஒரு வகை நடனம் சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கோவில் தேவதாசிகளால் ஆடப்பட்டு வந்ததாக மைலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோவில் தேவதாசியாக முன்பு பணிபுரிந்தவரான 92 வயதுடைய கௌரிஅம்மாள் கூறியுள்ளார்.

அந்த நடனத்தை இந்த நூற்றாண்டில் எவருமே ஆடவில்லையாம்!

வானவெளிப் பயணத்தால் வாழ் நாள் குறையும்

நீடித்த பரவெளிப் பயணங்களால் கண்களில் பூ விழுதல், நிரந்தர தோல் வியாதிகளுக்கு ஆளாகுதல், வாழ்நாள் குறைதல், இரத்தப் புற்று நோய்க்கு மிகவும் ஆளாகுதல் ஆகிய பெரிய தொல்லைகளும், பிறப்பியல் மாற்றங்களும் பரவெளி வீரர்களுக்கு ஏற்படக் கூடும் என விண்வெளி ஆராய்ச்சி நிபுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விற்பனையாகின்றது

கலசம்
(மாத இதழ்)
தனிப்பிரதி. 50, சதம்.
வருட சந்தா. ரூபா. 6-00

அலுவலக முகவரி:
கலசம் பப்ளிகேஷன்ஸ்
30, லீ அவனியூ,
கொழும்பு - 3.

உலக அரசியல் பாடல் விழா

பெர்லின் காங்கிரஸ் மண்டபம். பொதுவாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நாடாளுமன்றக் கூட்டங்கள் நடக்கும் இடம் அது.

அங்கே, எழு நாட்கள்! புருவம் சுருக்கி, நிதானித்து விஷயத்தையும் அதனையொட்டிவரும் செயலையும் அளந்து பேசும் விவாதங்கள் அங்கு இல்லை.

மாறுக வேட்டும், அதிர் வேட்டுமாக வெடித்துக்கிளம்பிய அரசியல் பாடல்கள், இயக்கப் பாடல்கள், மனவ லூட்டி வீறு கொண்டெழச் செய்யும் பாடல்கள் மேடையிலே ஊற்றெடுத்து அமர்ந்திருந்த மக்களிடையே புதுப் புனலாகப் பாய்ந்து அவர்களது உணர்விலும் உணர்ச்சியிலும் சங்கமித்தன.

''மக்களே முன்னேறுங்கள்!'' என்னும் இத்தாலியப் பாடல் இசைக்கப்பட்டபோது கூட்டத்தினரும் சேர்ந்து பாடத் தொடங்கிவிட்டனர். பன்னிரெண்டுக்கு மேற்பட்ட மொழிகளிலே இங்கு பாடல்கள் ஒலித்தன.

ஆமாம், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சுதந்திர ஜெர்மன் இளைஞர் சங்கத்தின் மிகச் சிறந்த இசைக்குழுவான பெர்லின் அக்டோபர் கிளப்பினரால் நடாத்தப்பட்ட மூன்றாவது அரசியல் பாடல் விழாவிலே தான் இந்தக் கான மழை பொழிந்தது.

இந்த அரசியல் பாடல் விழாவில் டென்மார்க், சுவீடன், நார்வே, பின்லாந்து பங்களாதேஷ், கிரீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், இந்தியா, இத்தாலி, சிலி, மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, போலந்து, ஹங்கேரி, கியூபா, பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கியா, சோவியத்-யூனியன் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

தெய்வங்கள் சாவதில்லை

— வில்லவன் —

உலகின்மேல் கறிச்சட்டியைக் கவிழ்த்து விட்டதுபோல் தடித்த இருட்டு. அது கிராமத்தின் ஒற்றையடிப்பாதை. அங்கு தவழ்ந்த சிறிய ஓடை, உருக்கிவிட்ட வெள்ளி என மின்னி ஓடும்போது மிழறும் மெல்லிய சல சலப்புக் கூடப் பயங்கரமாக ஒலித்துக் கிலேசத்தைக் கிளப்பும் அமைதியைத் தந்தது. ஓடையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்துயர்ந்த மரங்களில் இருந்து உதிர்ந்த சருகுகளைக் காற்று அலசும் போது கனியும் சரசரப்பும், வியாகுலத்தை வியாபிக்கும் நிசப்தமாக விளங்கியது.

இந்தப் பயங்கர வேளையில், பக்கத்துக் கிராமத்தில் ஒருவருக்கு 'அவஸ்தைப் பூசுதல்' கொடுக்கவென்று அவசரமாகப் போய்விட்டு, எதிலும் சிந்தனையைச் செலுத்தாது, வலது கையில் ஜெபமாலையை உருட்டிய வண்ணம் சைக்கிளில் வந்த சுவாமி அருட்பிரகாசர், ஒரு கணம் அதிர்ந்துபோய் ஒரு காலைத் தரையில் ஊன்றி சைக்கிளோடு அப்படியே நின்றார்.

ஜெபமாலைக் கையுடன் தன் இரு கண்களையும் கசக்கிக்கொண்டு கூர்ந்து கவனித்தார் அவர். எதற்கும் அஞ்சாதவர் என்று சுற்று வட்டாரக் கிராம மக்களால் புகழப்படும் பிதா அருட் பிரகாசர், நிஜமாகவே வியர்த்துப் போய் நின்றார்.

''பிசாசு என்னைச் சோதிக்க வருகிறதோ?'' என்று மனதுள் நினைத்தவராக மீண்டும் முன்னேற, தரையில் ஊன்றிய காலை உயர்த்தினார். இருட்டில் உருவத்தின் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அது அணிந்திருந்த உடையிலிருந்து பெண் என்று நிச்சயப் படுத்திக்கொண்டார். சுவாமியாரின் கண்கள் உருவத்தின் கால்கள் தரையில் பதிகின்றனவா என்று நோட்டம் விட்டன. அடர்ந்து வளர்ந்து பெருத்துப் படர்ந்த ஆலமரத்தின் அடியில் நின்றதால் உருவத்தின் கால்கள் அவருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் உருவமோ பாதி உடல் தெரியக் கையைக்காட்டி அவரை அழைத்தது.

தொண்டைக்குள் குடல் ஏறியது போன்று, சாமியாருக்கு இருந்தது. முகமெல்லாம் வெம்பி வியர்வை கோர்த்தது. இந்த நேரத்தில் தானா அந்தச் சனியன் பிடித்த ஆந்தை வேறு, அலறிக்கொண்டு அவர் தலைக்குமேல் பறக்க வேண்டும். ''யேசுவே ரட்சியும்'' 'பிதாசுதன்' இட்ட வண்ணம் அர்ச்சிஸ்ட மிக்கேல் சம்மனசின் ஜெபத்தை வாய்விட்டு எத்தனை பலமாகச் சொல்ல முடியுமோ, அத்தனை சத்தமாக ஜெபித்தபடி சைக்கிள் பெடலை உன்னி மிதித்தார்.

மோகனமாகச் சிரித்தபடி அவர் முன் உருவம் வந்து நின்றது. இருட்டைக் கிழித்துப் பற்கள் ஒளிர்ந்தன. ''பைசாசமே என்னை விட்டு அகலக்கடவாய்'' தன் 'லோப்' பையில் இருந்த யேசுவின் பாடுபட்ட சொரூபம் பதிந்த சிலுவையை எடுத்து ஆசீர்வாதம் செய்தார். என்னதான் தைரியமாக ஆசீர்வாதம் செய்தாலும் உள்ளுக்குள் பயம், அவரை உலுப்பிக்கொண்டுதான் இருந்தது.

அந்த உருவத்துக்கும் இப்போதுதான் தெரியவந்தது, தான் அழைத்தது ஒரு கத்தோலிக்க குருவானவரை என்று. வந்த வழியே பேசாது திரும்பி நடந்தது அவ்வுருவம்.

சாமியாரின் மனதில் பலம் கொஞ்சம் குதிர் விட்டது. சைக்கிளை நிறுத்தி விளக்கை அடித்துப் பார்த்தார்.

அது பிசாசுஇல்லை!

பெண்!!

அவருக்குத் தைரியம் முதிர்ந்தது. ''பெண்ணே நில்! நீயார்? இரத்தமே உறையும் இந்தக் கொடிய இருட்டில், மனிதர் நடமாடவே குலை நடுங்கும் காட்டில் உனக்கு என்ன வேலை?''

உருவம் பரிதாபமாக அவரைப் பார்த்தது. சைக்கிள் விளக்கில் இருந்து கசிந்த ஒளியில், அவள் கண்களில் நீர் முத்து உருளுவது தெரிந்தது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''என் பேசாது நிற்கிறாய்? நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்? உன் அழுகைக்குக் காரணம் என்ன? நீ விரும்பினால் சொல்! என்னால் உனக்கு எந்த விதத் தீங்கும்

கதாசிரியர் வில்லவன்

நேராது. ஆண்டவராகிய யேசுவின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்...நீ எதை...'' அவள் தேம்பித் தேம்பி அழத் தொடங்கவே கேள்விகளை முறித்துக் கொண்டார்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, அவரை நன்றாகப் பார்த்தாள். அவள் பார்ப்பதை விரும்பாமலோ என்னவோ, சாமியார் தன் விழிகளை நிலத்தில் குத்தினார்.

''என் ஃபாதர் தரையை பார்க்கிறீங்க? என்னைப்பற்றி நான் சொல்ல வேணுமா?'' அவள் சலனமின்றிச் சாமியாரை நோக்கிக் கேட்டாள்.

''நீ விரும்பினால் சொல் மகளே!''

''சொல்றேன் பாதர், சொல்றேன்!..'' தடைபட்டிருந்த நீர் மீண்டும் உடைபட்டுக் கொட்டியது.

சாமியார் அவளைப் பார்த்தபடி ஊமையாக நின்றார்.

''ஃபாதர் நான் என் இந்தக் காட்டுக்கு அதுவும் இந்த அகால நேரத்தில் வந்தேன்னு முதல்ல சொல்லட்டா?''

''எங்கிருந்து எப்படித் தொடங்க விருப்பமோ அங்கிருந்து தொடங்கு மகளே. உனக்கு ஆட்சேபனை இல்லை என்றால், நடந்துகொண்டே பேசுவோமே!''

''இல்ல ஃபாதர் நான் என் இங்கு வந்தேன்னு முதல்ல சொல்லிடுறேன். அதுக்குமேலயும் நீங்க என்னைக் கூட்டிட்டுப் போறதுன்னு நான் வாறேன்.'' அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''என் மகளே விசுவாசம் இல்லாது பேசுகிறாய்! உன் விசுவாசம் தான் உன்னை ரட்சிக்கும். சரி சொல்...''

''நான்...நான்...'' வார்த்தைகள் மேற்கொண்டு ஒலியாகக் கூச்சப்பட்டவை போல் அமுங்கிவிட்டன.

''மகளே என் தயங்குகிறாய்? சொல்...''

''நான் ரெண்டு ஆம்புளைகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' பத்திப் போட்ட பட்டாசு போல் வெடித்தன சொற்கள்.

''மகளே, நீ...?! ஓ மைஜீஸஸ்'' சாமியாரின் சர்வாங்கம் சிறுத்தது.

''ஆம் ஃபாதர் ஆம். இந்த நிலையிலையும் கூட நான் ஒரு குடும்பப் பெண்ணா வாழும் சிறு சந்தர்ப்பம் கிடைத்தால்... நாலு பேரப்போல தலை நிமிர்ந்து—புருஷன் பிள்ளைகுட்டி—சொந்தம் உறவு என்கிற கட்டுக்குள்ள அடைபட்டுக்கிடக்கவே விரும்புகிறேன்.'' தீர்மானத்தோடு அவள் சொன்னாள். அவர் சந்தேகத்தோடு அவளைப் பார்த்தார்.

''என் ஃபாதர் அப்படிப் பார்க்கிறீங்க? குடும்பப் பெண்ணா, கௌரவத்தோட வாழ நெனக்கிறவ இப்படி ஆனான்னு என்றா? நேசந்தான் அதேநேரத்தில் என் கடந்த கால சரித்திரத்தையும் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.'' சுவாமி அருட்பிரகாசர் அவளைக் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

''நான் ஒருத்தரை விரும்பினேன். எங்கள் வீட்டில் இதற்கு எதிர்ப்புவரவே, ஒருவருக்கும் தெரியாது இருவரும் வெளியேறிவிட்டோம். மூணு வருஷம் நல்லாத்தான் குடும்பம் நடந்தது. ஒரு நாள் சீக்கிரமா வந்திடுறேன்னு சொல்லிக்கொண்டு போனவர், மாதம் ஆறாகியும் வரவேயில்லை கடைசியாக, அவர் வேறு கல்யாணம் செய்து கொண்டதாகக் கேள்விப்பட்டு எல்லாப் பெண்களையும் போலக் கதறினேன். புலம்பினேன். என்ன புலம்பியும் என்ன?

''ஊருக்குப் போக முடியாது. சொந்தக்காரங்க மொகத்திலேயும் முழிக்க முடியாது. ஆண்டவன் படைக்கும்போது வயிறு ஒண்ணையும் படைச்சு வைச்சிட்டானே. நாலு வீட்டில வேலைசெய்து காலத்தைக் கடத்திக்கொண்டு வரும்போது இன்னொருவர் வந்து குறுக்கிட்டார்.

"என் காலடியில் தன் உயிரையே வைக்கிறதாகக் கெஞ்சினார். நானே சூடுபட்ட பூனை. மறுத்தேன். என்னைப்பதிவு செய்து வாழ்றதா சொல்லிச் சத்தியம் செய்தார். நம்பினேன். ஒரு வருஷம் நன்றாகத்தான் வாழ்ந்தார். பின் அவரும் போய்விட்டார். அப்புறம்......நான்..."

அவள் தொடர்ந்து சொன்னாள், "திரும்பத்திரும்பச் சொல்றேன் பாதர், இப்பகூட யாராவது நல்ல மனசோட என்ன எத்து வாழ்றதுன்னா... நிச்சயமாக நான் ஒரு குடும்பப்பெண்ணா வாழ்ந்து காட்டுவேன்."

கண்களில் நீர் வடிய அவள்கூறிய ஒவ்வொரு சொல்லும், கல்லில் விழுந்த உளிபோல, சாமியாரின் உள்ளத்தில் விழுந்தது.

"உண்மையாகவே உனக்கு நல்லதொரு வழிகாட்டி, வயிற்றுக்கும் சோறிட்டால் இந்தக் கேவலமான வாழ்வைவிட்டு விடுவாயா?"

"வழிசெய்யுங்க பாதர் வாழ்ந்து காட்டுகிறேன். என்னை நம்புங்க பாதர், நம்புங்க. இந்த இழி குழியில் இருந்து வெளி வர எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தாங்க......" வேர் அறுந்த மரம் போல் சாமியார் பாதக் கமலத்தில் கூப்பிய கரத்தோடு விழுந்தாள்.

மின்மினிப்பூச்சி ஒன்று தன் ஒளியை அவள் மீது படரவிட்டுப் பறந்தது.

தன் காலடியில் கிடந்த அவளைப் புனிதம் நிறைந்த தன் கரங்களால் தொட்டுத் தூக்கி நிறுத்திய சாமியார் "வா மகளே, போவோம்." என்று கூறித் தன் சைக்கிளைத் தள்ளியபடி நடந்தார். அவரைத் தொடர்ந்தாள் அவள்.

அவளைக் கிராமத்துக்குச் சாமியார் அருட்பிரகாசர் கூட்டிக்கொண்டு வந்த புதிதில் முழுக்கிராமமும் அவள் பால் இரக்கம் கொண்டு, நான் நீ என்று உதவியது. இன்றோ, சிலரைத் தவிர ஏனையவர்கள் அவள் இருக்கும் திசைக்கே திரும்புவதில்லை.

அவள் ஒரு வேற்று மதத்தவள். தான் தொண்டாற்றும் கத்தோலிக்க மதத்துக்கு அவளை மனம் திருத்தி எடுக்கவேண்

கஸ்தூரி

உண்மையான கஸ்தூரி மிக மிக விலையுயர்ந்ததாகும். இந்த நறுமணப் பொருள், வயது முதிர்ந்த கஸ்தூரி மானினுடைய அடி வயிற்றில் தொப்புளுக்கு அருகில், தோலுக்குப் பக்கத்தில் உள்ள சுரப்பியில் சேர்ந்துள்ளதாகும்.

நன்ருக வளர்ந்த மானில் ஒரு அவுன்ஸ் முதல் இரண்டு அவுன்ஸ் கஸ்தூரி உண்டாகும். மானைக் கொன்று சுரப்பியைத் தோலுடன் அறுத்தெடுத்து உலர்த்தி வைத்துக் கொள்ளுவார்கள். உலர்ந்த பிறகுதான் இதற்கு மணம்.

மங்கலான கருமை கலந்த சிவப்பு நிறமுள்ள இது, சிறு சிறு மணிகளாக இருக்கும்.

இன்று போலிச் சரக்குகளே 'கஸ்தூரி' என்ற பெயரால் விற்கப் படுகின்றன.

டும் என்னும் எண்ணத்தில், ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவள் குடிசைக்கு வந்து வேதாகமத்தைப் போதித்துப் போவார். இது கிராமத்தில் சலசலப்பை உண்டாக்கியது.

விளைவு!—?

புகாரைத்தொடர்ந்து புகாராகக் கருதினல் ஆண்டகைக்குப் படை எடுத்தன. ஐந்து நாட்களுக்கு முன்னல், எதைப் பற்றியோ விசாரணை செய்யக் கருதினல் ஆண்டகை தன்னை அழைத்திருப்பதாகச் சொல்லி விட்டு போனவர் இன்னும் கிராமத்துக்கு வரவில்லை. இது வேறு, பலவித ரஸ வதந்திகளைப் பரப்பின.

''ஃபாதர் நான் சொல்வது உங்களுக்கு புரியவில்லை. நாம் பாவிகளைத்திருத்தும் புனிதமான சேவையில் தான் இருக்கிரேம் அதற்காகக் கால நேர வர்த்தமானம் இல்லையா? சரி, பகலில் தான் அங்கு போகிறீர்கள்! இரவில் போக வேண்டிய அவசியம் என்ன?'' பிதா அருட்பிரகாசரின் குற்றங்களைக் கண்டு பிடித்து விட்ட உறுதியோடு பேசினர்கள், கருதினல் ஆண்டகை.

அவர் அமர்ந்திருந்த நாற்காலிக்கு முன்னலுள்ள கதிரையில் சாய்ந்து உட்கார்ந்த பிதா அருட்பிரகாசர் எந்த வித உணர்ச்சியும் இல்லாது அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''உங்களைப் பற்றி வந்திருக்கும் புகார்கள் தவருக இருக்கலாம். தவறு என்றே நானும் கருதுகிறேன். என்ருலும் இப்படி ஒரு சந்தர்ப்பத்தைப் பொது மக்கள் மத்தியில் நாம் ஏற்பட விடலாமா? எத்தனை விரசமான நிகழ்ச்சி!'' கருதினல் ஆண்டகை ஒவ்வொரு சொல்லாக நிறுத்தி, நிதானமாகப் பேசினர்கள்.

பிதா அருட்பிரகாசர், எந்த வித உணர்ச்சியும் இல்லாது அவரையேபார்த்துக் கொண்டிருந்தார்.

''நீங்கள் சொல்லுகிறீர்கள், 'அவள் ஓர் அஞ்ஞானி அதனல் அவளை மனம் திருத்தி நமது திருச் சபைக்கு எடுக்கும் நோக்கத்தில் தான் போனீர்கள் என்று. நான் நம்புகிறேன் ஃபாதர், நம்புகிறேன். ஆயிரம் நல்லவர்கள் மத்தியில் பேசிக் காலத்தைத் தூர்ப்பதைவிட, ஒரு கெட்டவனைத் திருத்துவது கோடி நிகர். அதை நான் உணர்கிறேன். அதற்காக, எப்போது என்ன கிடைக்கும் என்று இமைகளை விரித்துப் பார்த்துக்கொண்டிருக்கும் உலகத்துக்கு, யார் பதில் சொல்வது? நீங்கள் சொல்லலாம். உண்மையின் சொரூபியான யேசுவையே சிலுவையில் அறைந்து கொன்ற உலகம் தானே! கேட்கவா வேண்டும்?'' பிதா அருட்பிரகாசர் எந்த வித உணர்ச்சியும் இல்லாது, அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''இப்போது உங்களைப் பற்றி வந்திருக்கும் புகார்கள் உங்களோடு மட்டுமா போகும்? நீங்கள் ஒரு சாதாரண மனிதராக இருந்தால், யார் ஃபாதர் இவற்றைப் பற்றிக் கவலைப் படப் போகிருர்கள்? இந்த 'லோப்'புக்கு மதிப்பு கொடுத்தாவது...'' பிதா அருட்பிரகாசர் எந்த வித உணர்ச்சியும் இல்லாது, அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஃபாதர் இதற்கு மேலும் நீங்கள் அந்தப் பெண் இருக்கும் கிராமத்தில் இருப்பது நல்லதில்லை...''

''அதற்காக'' என்று கேட்பதைப் போல் நிமிர்ந்து உட்கார்ந்தார் பிதா அருட்பிரகாசர்.

''ஆகையால் இன்னும் ஒருவாரத்தில் அந்தக் கிராமத்திலிருந்து உங்களை மாற்றுகிறேன்'' கருதினல் ஆண்டகை இப்படிக் கூறவும், பிதா அருட்பிரகாசர் தான்

இருந்த கதிரையில் இருந்து எழுந்து நின்ருர்.

கருதினுல் ஆண்டகை பிதா அருட் பிரகாசரையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அருட்பிரகாசர் பேசத்தொடங்கினுர். ''நான் குருவானவராகி சுமார் இருபத்தி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த வருஷங்களில் எத்தனேயோ 'மிசாம்'களில் பங்கு கொண்டிருக்கிறேன். எத்தனேயோ பாவாத்துமாக்களேச் சந்தித்திருக்கிறேன். போதித்தும் இருக்கிறேன். யாருமே பரிபூரண மன விழைவோடு திருந்தியதைக் காணவேயில்லே. காரணம், அவர்கள் எல்லாம் தங்கள் மனத்திருப்திக்காக வந்தார்களே அல்லாது, தாங்கள் நித்திய மோட்ச ராச்சியத்துக்குச் செல்லும் அந்தரங்க சுத்தியைப் பக்குவப் படுத்தும் நோக்கில் வரவே இல்லே. ஆனுல் இப்போது வந்திருப்பவளோ, எனது குருவானவர் வாழ்க்கையில் எனக்கு வெற்றியைத் தேடித் தர வந்திருக்கும் மரிய மதலேனுவாகவே காட்சி தருகிருள். ஆத்ம சுத்தியோடு, நாம் சொல்வதைக்கேளாது போகும் ஆயிரக்கணக்கானவர்களுக்குப் போதிப்பதைவிட, நாம் சொல்வதைக் கேட்டு நல்வழி நடக்கத் துடிக்கும் ஒரு பாவியைத் திருத்துவதை, எனது பாக்கியமாக கருதுகிறேன்.

''ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லலாம் அவர்களுக்கு எல்லாம் நான் சொல்வது இதுதான்: மாடு மழையில் நனேந்து விட்டது என்பதற்காகப் பாலே நீராகத் தருவதில்லே. போலிகளே வைத்துக் காலத்தை எரிப்பதைவிட ஒரு பாவியையேனும் திருத்துவதையே நான் குருவானவர் ஆனதன் பேறு என்று நம்புகிறேன். அதற்கு நான் அணிந்திருக்கும் இந்த உடை ஒரு தடை என்ருல்......!'' அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லே.

கருதினுல் ஆண்டகையின் நயனங்கள் போய்க்கொண்டிருந்த 'அருட்பிரகாசத்தின் பாதங்களேப் பார்த்துக் கொண்டிருந்தன. ●

நடையில் தெரியும்

ஒருவருடைய நடையிலிருந்தே அவருடைய குணுதிசயங்களேத் தெரிந்து கொள்ளலாம்.

நன்ருக நிமிர்ந்து, ஒரே அளவான அடிகளே வைத்து நடப்பவர்கள் எதிலும் நிதானமாகவே இருப்பார்கள். இவர்கள் மற்றவர்களுடன் நம்பிக்கையாகவும் உண்மையாகவும் வாழ்வார்கள். இவர்கள் தைரிய சாலிகளும் கூட.

சிறிதும் பெரிதுமாக அடிகள் வைத்து, இழுத்து இழுத்து நடப்பவர்கள் சிந்தனு சக்தி குறைவானவர்களாகவும், வெற்றி பெறும் தகமை அற்றவர்களாகவும் இருப்பார்கள்.

வாத்தைப் போல் அசைந்து, ''தொப், தொப்'' என்ற சத்தத்துடன் நடப்பவர்கள் சுய நலக்காரர்களாக இருப்பதுடன், கொடுமை புரிவதிலும் பிரியம் உடையவர்களாக இருப்பார்கள்.

கால்களே அகற்றி, சிறிதும் பெரிதுமாக அடிகள் வைத்து, மெதுவாக நடப்பவர்கள் வீணர்களாகவும், பேராசை பிடித்தவர்களாகவும் இருப்பார்கள். குனிந்து கொண்டு நடப்பவர்கள் எதற்கும் பணிந்தே நடப்பர்.

பாதங்களே உட்புறமாகச் சாய்த்து நடப்பவர்கள், மாறுதலே விரும்பாதவர்கள். திடமான முடிவு உடையவர்கள் இவர்கள். சில சமயங்களில் கஞ்சத்தனம் உடையோராகவும் காணப் படுவர்.

பாதங்களே வெளிப்புறமாகச் சாய்த்து நடப்பவர்கள், முன் யோசனே அற்றவர்களாகவும் தயாள குணம் உள்ளவர்களாகவும், மனக்கோட்டை கட்டுவோராகவும் இருப்பார்கள்.

சிறு சிறு அடிகளே வைத்து, வேகமாக நடப்போர் பதட்டமுடையவர்களாக இருப்பர். மெதுவாகப் பெரிய அடிகள் வைத்து, உறுதியாக நடப்பவர்கள் திடசித்தக் காரர்களாயிருப்பர். ●

உங்களுக்குத் தேவையான

பித்தளை, செம்பு, அலுமினியப்

பாத்திரங்களைத் தெரிவு செய்ய

கொழும்பில் ஏற்றதொரு இடம்:

எஸ். கே. செல்லையா,

(இறக்குமதியாளர்களும் விற்பனையாளர்களும்)

2, டாம் வீதி, கொழும்பு.

பூ! இவ்வளவு தானா?

வெகு காலத்துக்கு முன் பாரசீகத்தை ஆண்டுவந்த ஒரு அரசனுக்கு சரித்திரம் படிக்க வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று.

உடனே அவன் தன் நாட்டில் உள்ள பல அறிஞர்களையும், ஞானிகளையும் அழைத்தான்.

''மனித ஜாதியின் சரித்திரத்தை நான் படிக்க வேண்டும். அதனை எழுதிக் கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

அரசனின் கட்டளையை ஏற்று அந்த அறிஞர்களும், ஞானிகளும் இருபது வருஷ காலம் இரவு பகலாகக்கண்விழித்துப் பன்னிரண்டாயிரம் புத்தகங்களை எழுதினார்கள் அவற்றைப் பன்னிரண்டு ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு அவர்கள் அரண்மனைக்கு வந்தார்கள்.

மன்னன் அந்தப் புத்தகங்களைப் பார்த்தான். அவனுக்குத் திக்பிரமை உண்டாயிற்று. ''இத்தனைப் புத்தகங்களைப் படிக்க எனக்கு நேரம் எங்கே இருக்கிறது? இதைச் சுருக்கமாக எழுதி வாருங்கள்'' என்றான் அரசன்.

ஞானிகள் மீண்டும் முயன்று பலவருஷங்களுக்குப் பிறகு மனிதஜாதியின் சரித்திரத்தை இரண்டாயிரம் புத்தகங்களில் சுருக்கமாக எழுதி அவற்றை நான்கு ஒட்டகங்களின் மேல் வைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினர்.

மன்னன் அவற்றைப் பார்த்தான், மீண்டும் அவன் முகத்தைச் சுளித்தான். ''இதுவும் அதிகம், இன்னும் சுருக்கமாக எழுதி வாருங்கள்'' என மறுபடியும் கட்டளையிட்டான்.

அவர்களும் திரும்பவும் அவற்றைச் சுருக்கி எழுத எடுத்துச்சென்றனர்.

பல வருஷங்கள் கழிந்தன. அரசன் கிழவனானான். ஞானிகளும் ஒருவர் பின் ஒருவராக இறந்து மறைந்தார்கள். ஒருவர் மாத்திரம் பாக்கியாக இருந்தார்.

ஒருநாள் அவர் மூன்று புத்தகங்களை தம் தலைமேலே வைத்துச்சுமந்து கொண்டு அரண்மனைக்கு வந்தார்.

அப்போது அரசன் சாகும் தறுவாயில் படுக்கையில் இருந்தான்.

ஞானியின் தலைமேல் இருந்த புத்தகங்களைப் பார்த்ததும் அவனுக்குத் துக்கம் உண்டாயிற்று. ''ஐயோ, கடைசியில் மனிதஜாதியின் சரித்திரத்தைப் படிக்காமலேயே சாகப் போகிறேனே!'' என்று கண்ணீர் பெருக்கினான் அரசன்.

ஞானி அரசரைப் பார்த்து ''அரசே கவலைப் படவேண்டாம். நீங்கள் இந்தப் புத்தகங்களைப் படிக்க வேண்டியது இல்லை. நான் மனித ஜாதியின் சரித்திரத்தை நாலே நாலு வார்த்தைகளில் எழுதியிருக்கிறேன். கேளுங்கள்'' என்றான்.

''மனிதன் பிறந்தான். இருந்தான். இறந்தான். இவ்வளவேதான்'' என்றான் அந்த ஞானி.

''பூ...இவ்வளவுதானா?'' என்றான் மன்னன் வியப்புடன்.

ஒருவர்: இந்தியப் பத்திரிகைகளுக்குக் கொடுத்த ஆதரவை இதுபோல் இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளுக்கும் கொடுக்க வேண்டும்.

மற்றவர்: நிச்சயமாக...நிச்சயமாக...! இது என்ன புத்தகம், இப்படிக் கொடுங்கள் பார்த்து விட்டுத் தந்துவிடுகிறேன்.

சித்தரின் சிந்தனைகள்

மதிப்பு

புத்தகக் கடையொன்றில் பத்து வருடங்களுக்கு மேலாக அந்தக் கவிதை நூல் வைத்த இடத்திலேயே தூசி படிந்து வாங்குவாரற்றுக் கிடந்தது.

விலைப்படாது அழுக்கேறிக் கிடந்த நிலையில்தான் அப்புத்தகத்தை ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கினார் ஒரு வெளி நாட்டவர்.

அப்போது அந்த நூல் சொல்லிற்று:

''மாணிக்கம் மறைந்து கிடந்தாலும் மதிப்பு இழப்பதில்லை. வைர நிலவை மேகம் மறைத்தாலும் ஒளி மங்குவதில்லை.''

மனிதனின் சொத்து

வானத்தைப் பார்த்து மனிதன் ஒரு கேள்வி கேட்டான்: ''வானமே, நீ சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்கள் என்ன?'' என்று.

''நிலவும் நட்சத்திரங்களும் தான் எனது நிறைந்த சொத்துக்கள் என்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று நகைத்தது வானம்!

கடலைப் பார்த்து அந்த மனிதன் கேட்டான்: ''கடலே, நீ சேர்த்து வைத் திருக்கும் சொத்துக்கள் என்ன?''

மூப்பறியாத்திரவியங்களான முத்தும் பவளமும்' என்று முறுவலித்தது கடல்!

எரிந்து கொண்டிருக்கும் மெழுகு வர்த்தியைப் பார்த்து அவன் கேட்டான்.

''மெழுகு வர்த்தியே, நீ சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்கள் என்ன?''

அதற்கு மெழுகு வர்த்தி. ''தியாகம்'' என்று பளீரெனச் சொல் லிற்று!

பின்னர், வானமும், கடலும் மெழுகு வர்த்தியும் மனிதனைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டன.

''மனிதனே, நீ சேர்த்து வைத்திருக் கும் சொத்துக்கள் என்ன?''

மனிதன் நிலத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான்:

''பேராசை, சுயநலம்''

தர்க்கம்

விழிகளும், செவிகளும் நீண்ட நேரம் தர்க்கித்துக் கொண்டிருந்தன. தர்க்கம் உச்ச நிலையை அடைந்தது.

''கண்கள் இல்லையென்றால் மனித னால் வாழ முடியாது'' என்றன விழிகள்.

''காது அடைத்து விட்டால் கண்கள் இருந்தும் ஒன்றும் ஆகாது'' என்றன செவிகள்.

வாய் மௌனமாக இருந்தது. மூக்கு அமைதியாகச் சொல்லிற்று:

''மூச்சுக் குழல் அடைத்து விட்டால் உயிரே நின்று விடும். அப்புறம் நீங்கள் இருவரும் பயனற்ற சுமைகளே.''

கூழாங்கல்

இரண்டு நாணயங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டன.

''நிறை கூடியவன் நான்'' என்றது முதல் நாணயம்.

''பெறு மதி கூடியவன் நான்'' என் றது இரண்டாவது நாணயம்.

அருகில் கிடந்த கூழாங்கல் ஒன்று சிரித்து விட்டு அடக்கமாகச் சொல்லிற்று:

''நீங்கள் இருவரும் என்னைப்போன்ற கூழாங் கற்களே. தேவைக்குதவாத செல்லா நாணயங்களே''

நாணயங்கள் வாயடங்கி மௌனமாகி விட்டன.

நியூயோ(ர்)க்

தன் மகளால் ஒதுக்கி வைக் கப்பட்ட அவளது மூன்றாவது கணவனை (மருமகனை) ஒரு தாய் (மாமி) தானே மறுமணம் செய்துள்ளாள்.

இது இலங்கையில் அல்ல. நியூயோர்க்கில்!

பிள்ளைப் பேறு பற்றிய கதைகள்

வாழ்க்கையின் இரகசியங்கள் பற்றியோ ஆண், பெண் தொடர்பு பற்றியோ, தெரியாத பலர் நம் மத்தியில் இருக்கலாம். ஆணிடமிருந்து பூரண அன்பைப் பெற என்ன செய்யவேண்டும்? எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றோ, பெண்களை நேசிப்பது எப்படி? என்பது பற்றியோ தெரியாதவர்களும் நம் மத்தியில் பெரும் அளவில் இருக்கலாம். ஆனால் எப்படி ஒரு பெண்ணுக்கு சிசு உற்பத்தியாகிறது என்றோ, எவ்விதம் அவள் தாய்மையை அடைகிறாள் என்றோ தெரியாதவர்கள் நம் மத்தியில் அரிதிலும் அரிது என்றுதான் சொல்ல வேண்டும்.

வயதை அடைந்த ஆணும் பெண்களும் இதை நன்கு தெரிந்து கொண்டுவிடுகிறார்கள். ஆனால் மேலை நாடுகளில் நிலைமை வேறாக இருக்கிறது.

இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் என்ற இடத்தில் உள்ள 16 வயது யுவதி ஒருத்திக்கு கருத்தரிப்பு என் என்பதே தெரியாதாம். திடுதிப்பென்று வீட்டில் இவள் முரண்டு பிடிக்கத் தொடங்கினாள். எதிலும் ஒரு புரட்சிப் போக்கு இவளிடம் குடிகொண்டிருக்கக் காணப்பட்டது. அடங்காப்பிடாரியாகிவிட்டாள். தாயாருக்கு இது பெரும் கவலையை ஏற்படுத்தியது. இதனால் அத்தாய் மகளை ஒரு மன நோய் வைத்தியரிடம் கொண்டுபோய்க் காண்பித்தாள். வைத்தியர் பரிசோதனை செய்ததில் அந்த யுவதியை யாரோ ஒருவன் எப்பவோ ஒரு நாள் பிடித்து முத்தம் கொடுத்திருக்கிறான். அந்த முத்தம் காரணமாக தனக்கு கர்ப்பம் தரித்திருக்கிறது என அந்த யுவதி பயந்திருக்கிறாள் என்பது தெரிய வந்தது.

ஆணும் பெண்ணும் முத்தம் பரிமாறிக் கொண்டால் பிள்ளை உண்டாகும் என்று இந்த யுவதி கருதியிருக்கிறாள். அதனால் வந்த வினை இது. இது போன்ற சிறு சிறு சம்பவங்கள் உலகின் பல பகுதிகளிலும் இப்பொழுதும் நடக்கத்தான் செய்கின்றன. ஏனெனில் குழந்தைகள் எவ்வாறு ஜெனிக்கின்றன என்பதைத் தெரியாத யுவதிகள் பலர் இன்றும் உலகில் இருக்கிறார்கள்.

இத்தாலிய நடிகையான சார்லா லூசெயி என்பவள் தனது மாஜிக் காதலனுக்கு எதிராக வழக்கொன்றை மிலான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

கூடாத ஓர் இடத்தைத் தெரிவு செய்து தன்னை அங்கு 'பிக்னிக்'குக்கு

அழைத்துச் சென்றதாயும், அதனால் தான் கர்ப்பவதியானதாயும் குற்றம் சாட்டி இந்த வழக்கை அவர் தாக்கல் செய்திருந்தார்.

'பிக்னிக்' சென்ற இடத்தில் தவளைக் குஞ்சுகள் வசிக்கும் புற்றரை மீது உட்கார வைத்தார். இவ்விதம் தரைமீது உட்காரும் பெண்கள் கருத்தரித்துவிடுவார்கள் என்று அறிந்திருந்தும் அவர் என்னை உட்காரவைத்திருக்கிறார். எனவே நான் கர்ப்பவதியானதற்கு இவரின் இந்த நடத்தைதான் காரணமென்று அந்தத் நடிகை நீதிபதியிடம் எடுத்துரைத்தார்.

ஆனால் நீதிபதி அக்கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஸ்டொக் ஷோம் நகரில் மற்றொரு ருசிகர விவாக ரத்து வழக்கு நடந்திருக்கிறது.

தாம் கர்ப்பவதியானதற்கு மந்தைகளைக் குளிப்பாட்டும் ஆற்றில் தாம் நீச்சலடித்ததுதான் காரணமென்று திருமதி எலிசார்ஸ்டோம் சொன்னார்.

ஆனால் மனைவியிடமிருந்து விவாக ரத்துக் கோரி நின்ற கணவனோ 'மாற்றொருவனுடன் மனைவி கள்ளத் தொடர்பு வைத்திருந்தாள். அதனால் தான் அவள் கர்ப்பவதியானாள்' என்று வாதிட்டார். மனைவி மன்றாடினாள். கோர்ட்டில் விவாகரத்து வழங்கப்பட்டது. கர்ப்பம் தரித்ததற்குத் தான் செய்த பாலியல் உறவு தான் காரணமென்று திருமதி எலிக்குத் தெரியாதிருந்தது முற்றிலும் உண்மையே!

பாலியல் நாகரிகம் முத்திப் பழுத்த பிரான்ஸ் நாட்டில் கூட கர்ப்பம் தரிப்பது எப்படி? என்று தெரியாத யுவதிகள் சில குக்கிராமங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஜோர்ஜெட் விட்டாவி என்ற பெண் தான் கர்ப்பம் தரித்ததற்கு பாரிஸ் நகரிலுள்ள 'ஹோட்டல் வெயிட்டர்' ஒருவன் காரணம் என்கிறார்.

தனக்கு வைன் தந்த அதே கிளாசில் இந்த வெயிட்டரும் அடுத்து வைன் ஊற்றிக் குடித்ததுதான் காரணமென்கிறார் இந்த அம்மையார்.

சந்திரமண்டலத்துக்கு மக்களை அனுப்புமளவுக்கு அறிவு முற்றிய விஞ்ஞானிகள் உள்ள அமெரிக்காவிலும் இதே நிலைமை இருக்கத்தான் செய்கிறது.

பிரெயின் டுலி என்பவர் தனது பின் பக்கக் கரங்களின் உதவியால் தட்டிக் கொடுத்தார் என்றும் அதன் பின்னர் தான் தாம் கருத்தரித்ததாகவும் மிமி பெயில்டன் என்ற அமெரிக்க யுவதி சொல்கிறார்.

நண்டுக்கறியோ அல்லது பெரிய இறால் மீனோ உட்கொள்வதால்தான் பெண்களுக்கு கரு உண்டாகிறது. எனவே யுவதிகளாகிய எங்களுக்கு இந்தக்கறிகள் வேண்டாம் என்கிறார்கள் பெல்ஜியம் யுவதிகள்.

டென்மார்க்கிலுள்ள சில யுவதிகள் கெட்ட நினைவுகளால் தான் தமக்கு

கரு உண்டாகிறது என்கிறார்கள்.

சிரியாவிலோ நிலைமை வேறு. கருத் தரியாத மணமான பெண்கள், நீர்ப் பாசன கால்வாய்க்குச் செல்கிறார்கள். அங்கு மறிப்பு முறிக்கப்படும் நேரம் பார்த்து அந்த அணை முறிப்புக்கு அருகே நின்று நீராடுகிறார்கள். விரைந்து பாயும் நீரின் வேகம் கரு உற்பத்தியைத் தந்துவிட்டு செல்கிறது என்கிறார்கள் இவர்கள்.

மொரோக்கோவில் பிள்ளைப் பேறு இல்லாத பெண்கள் பிள்ளைப் பேற்றுக் காக இராக்காலங்களில் காய்கறித் தோட்டம் வழியே நிர்வாணமாக உலாவி வருகிறார்கள்.

செக்கோஸ்லேவியாவில் பிள்ளைப் பேறு விரும்பும் பெண்கள் நடுக்கோடை இரவில் விதம் விதமான ஒன்பது பூக்களை கொய்து வருகிறார்கள்.

ஆனால் கென்யாவிலோ பெண்களின் முதுகுப்புறம் கட்டப்படும் மரப் பொம்மை ஒன்று பிள்ளை பெறும் தந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து விடுகிறதாம். ●

நீச்சல்

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி! அது அந்தக்காலம்.

இன்றோ அதிகாரத்திலிருந்து கவிழ்க்கப்பட்ட மாஜி ராஜ்ய அதிபதிகளின் நிலையை ஆண்டிக்கும் இளைத்தவர்கள் என்று சொல்லலாம்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் ஆட்சியிலிருந்த காலத்தில் பாகிஸ்தானில் அவருக்கு துதி பாடாதவர்கள் இல்லை. இன்றோ நிலைமை பெரிதும் பரிதாபமாக உள்ளது.

70 கோடி ரூபாயை ஒரு அந்நிய வங்கியில் அவர் பதுக்கி வைத்திருக்கிறார். இவரை நாட்டை விட்டு வெளியேற விடக்கூடாதென்று ஒரு முஸ்லிம் லீக் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

1958 அரசியல் சட்டத்தைக் 'கொலை' செய்ததற்காக கூண்டிலிட்டு குற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று மார்ஷல் அஷ்கர் கான் கோரியிருக்கிறார்.

இன்னொரு சுவாரஸ்யமான கோரிக்கையை பாகிஸ்தான் ஜனநாயக கட்சிப் பிரமுகர் ஒருவர், முன்வைத்திருக்கிறார்.

இங்கிலாந்தில் கன்ஸர்வேடிவ் மந்திரி சபையை ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆட்டிவைத்த 'கிரிஸ்டின் கீலர்' அம்மணியின் சம்பவம் ஞாபகமா?

அப்போது, அஸ்டர் பிரபு வின் நீச்சல் தடாகத்தில் ஜனாதிபதி அயூப் கான் கிறிஸ்டீன் கீலருடன் நீச்சல் அடித்துக் குதூகலித்ததாக கதை அடிபட்டதல்லவா?

இதை வைத்து அயூப் கானின் சுய சரிதை நூலுக்கு ஒரு புதிய அத்தியாயத்தை அவர் எழுத வேண்டுமாம்.

புதிய அத்தியாயத்திற்கு இவர் ஒரு தலைப்பையும் வழங்க முன்வந்திருக்கிறார்: அதுதான் ''மாபெரும் நீச்சல்'' ●

கசகசாவை அரைத்துப் பாலில் கலந்து காய்ச்சிச் சாப்பிடுங்கள். இரவில் நிம்மதியாகத் தூக்கம் வரும். கசகசா நரம்புகளைச் சுறு சுறுப்பாக இயங்க வைக்கிறது.

With the best compliments from

KANDY MEDICAL STORES,

96, Trincomalee Street,

KANDY.

T'Phone : 7563.

தாயின் கதை

மூலம்: மலையாளம்

தமிழில்: எம். ஜி. ஆர்

"யாரும் நம்மைப் பார்க்க வில்லையே என்று எந்தத் தவ றுன காரியத்தையும் செய்யக் கூடாது. யாராவது, எங்கிருந்தா வது பார்த்துக் கொண்டேதான் இருப்பார்கள்.

"என்பதற்கு இந்தக் கதை யைத் தான் கூறுவார்கள் கேரளத்து மக்கள்—இதை என் தாய் கூட அடிக்கடி நினைவு படுத்துவதுண்டு" என்று கூறு கின்றுர் கதாசிரியர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன்.

ஒரு தாய். அவளுக்கு ஒரு பச்சிளம் குழந்தை. அவர்கள் இருவருமே வறுமை யின் கோரப் பிடியில் சிக்குண்டு கிடந்தனர்.

அந்தத் தாய் நா வரண்டு, குடல் சுருங்கி, தளர்ந்த நடையுடன் சென்று கொண்டிருந்தாள். அவள் குடலைப் பசிக் கொடுமை பிசைந்து கொண்டிருந்தது.

அவள் எப்படியோ தனது பசியைத் தாங்கிக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் கையில் உள்ள அந்தக் குழந்தை?

அந்தப் பாலகன் பசிக் கொடுமையால் வீறிட்டுக் கத்திக் கத்தி சோர்ந்து போய் அவள் தோளில் துவண்டு கிடந்தான்.

அந்தத் தாயின் சோகம் கப்பிய இமை கள் திறந்து சுற்றுடலைப் பார்க்கும் பொழுது, தன் குழந்தையைப் போன்ற பாலகர்கள் பட்டாடைகள் அணிந்து, பழங் களைக் கடித்து, எறிந்து விளையாடும் காட்சி அவள் கண்களில் நீர் மல்க வைத்தது.

பிச்சை எடுத்தாவது தன் குழந்தைக் குச் சிறிது உணவு வாங்கலாம் என்றால்— யாரிடமும் கை நீட்டி யாசகம் பெற அந்தத் தாயின் தன்மான உள்ளம் தடைபோட்டது.

பகல் முழுவதும் இந்தப் போராட்டத் திலே சிக்கிய தாய்—இரவிலாவது குழந் தையின் பசியைப் போக்கி விடலாம் என்று முடிவு செய்தாள். பல இடங்களில் அலைந் தும் அவளுக்குத் தோல்வி தான் கிடைத்தது.

கடைசியாக அவளுக்கு உள்ள ஒரே வழி அது தான் ஆம்; அதைத் தவிர இந்த உலகத்தில் தன் குழந்தையின் பசியைப் போக்க வேறு எந்த வழியுமே கிடையாது என்ற முடிவிற்கே வந்தாள்.

அப்படி என்றால், அவள் திருடித் தான் ஆகவேண்டும்.

எதைத் திருடுவது?

தங்கத்தையோ, வைரத்தையோ அல்ல. குழந்தையின் பசிக்கு ஏதாவது.........

ஆனால், அதை யாரும் பார்த்துவிடக் கூடாதே; தன்னை யாரும் திருடி என்று சொல்லிவிடக் கூடாதே என்று அவள் உள் மனம் அடித்துக் கொண்டது.

இருந்தும் எப்படியாவது தன் குழந் தையின் பசியைப் போக்க அவள் துணிந்து விட் டாள். அந்த முடிவுடன் ஒரு வீட்டுத் தோட் டத்துள் நுழைந்தாள்.

அந்த தோட்டத்தில் ஏதாவது காய், கனிகள் மரங்களில் இருக்கின்றதா? என்று ஒரு நோட்டம் விட்டாள்.



அங்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு அவள் கண்கள் அங்கும் இங்கும் தேடி அலைந்த போது மாட்டுத் தொழுவத்தில் உள்ள கழுநீர்த் தொட்டி தான் அவளுக்குத் தென்பட்டது.—அதில் பழைய அரிசிக் கஞ்சி மாட்டுக்காக ஊற்றி வைக்கப் பட்டிருக்கின்றது.

அந்த மாட்டுக் கஞ்சியில் கொஞ்சமாவது அள்ளிக் கொடுத்தால் குழந்தையின் பசி சற்றுத் தணியும் என எண்ணுகிறாள்.

அந்தப் பௌர்ணமி இரவில் கூரை வேயப் படாத அந்த மாட்டுத் தொழுவத்தில் உள்ள கழுநீர் தொட்டியை நெருங்கிக் குனிந்து அதை அள்ள முற்படுகையில், அந்தத் தெளிந்திருந்த தொட்டியில் பூரணச் சந்திரன் தள தள என்று தெரிந்ததைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

உடனே, சுற்றும் முற்றும் பார்த்த படி பதறிப்போய் அவ்விடத்தை விட்டே சென்று விட்டாள் அந்தத் தாய்!

ஏன்? அவள் ஏன் கஞ்சியை எடுக்காமல் செல்கின்றாள்? அவள் திருடுவதை வானத்துச் சந்திரன் பார்த்து விடுவானே என்ற பயம் தான் அந்தத் தாய்க்கு.

அடுத்த நாள் விடிந்ததும் அவள் குடிசையில் அவளுடைய அழுகுரல்தான் கேட்டது. ஆம்; அந்தக் குழந்தை பசியால் இறந்து விட்டது. ●

ஒருவர்: குறைந்த விலையில கார் ஏதும் அம்பிட்டா மெல்லமா இங்கால தள்ளிவிடன்.

கார் புரோக்கர்: ஒரு கார் நிக்குதுதான்...ஆனால் நடுவழியிலயும் தள்ளவேண்டி வரும். பரவாயில்லையே?

卐 வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவைகளைச் சும்மா கூடையில் போட்டு வைத்தாலே போதும், கெடாது. இவைகளை ரெபரிஜிரேட்டரில் வைக்கவேண்டிய தேவை இல்லை. சீக்கிரம் கெட்டுப் போகும் பொருள்களைத்தாம் ரெப்ரிஜிரேட்டரில் வைக்க வேண்டும்.

卐 சமையலறையில் எறும்புகள் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதா? சுவர் ஓரத்தில் உப்பைத் தூவி வையுங்கள். அலமாரித் தட்டுகளில் உப்பைத் தூவி வையுங்கள். எறும்புகள் வராது.

இருண்ட வானம்

வானம் என்ற ஒரு பொருள் கிடையாது நம்பூமியைச் சுற்றிக் காற்று மண்டலம் இருக்கிறது.

சூரியனுடைய ஒளி அக்காற்று மண்டலத்தின் வழியாக வரும் போது, அதில் உள்ள தூசிகள், ஒளியின் மற்ற நிறக் கதிர்களை இழுத்துக் கொண்டு, நீல நிறக் கதிர்களை மட்டும் நமக்கு அனுப்புகின்றன. ஆதலால் வானம் ஒன்று போலவும், அது நீலமாக இருப்பது போலவும் நமக்குத் தோன்றுகிறது.

இரவில் சூரிய வெளிச்சம் இல்லாத படியால் இருள் மட்டுமே தெரிகிறது. இந்த இருள் வெளியில்தான் நட்சத்திரங்கள் இருக்கின்றன.

வானம் என்றோ வானத்துக்கு அப்பால் என்றோ கூறுவது தவறு. காற்று சுமார் 50 மைல் தொலைவு வரையில் தூசிகள் உடையதாக இருப்பதினால், வானம் என்பது ஒரு பொருள் போலத் தெரிகிறது. காற்றில் தூசிகள் இல்லாமல் இருந்தால், இரவைப் போலவே பகலிலும் வானம் கறுப்பாகவே இருக்கும்.

—இந்த உண்மையைக் கண்டு பிடித்துக் கூறியவர், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் டிண்டல் என்பவர். ●

இரவுப் பறவைகள்

ஷண்பா

இரவு விடுதி (நைட் கிளப்) ஒன்றின் மாடியிலே, இசைக்கேற்ப திசை நான்கும் அசைந்தாடும் ஆரணங்கின் அங்கங்களின் பாங்கதனை ,வைத்த கண் வாங்காது அணுவணுவாக ரசித்த வண்ணம் சித்தம் பறிகொடுத்த நிலையில் சிலை போன்றிருந்த செல்வச் சீமான்கள் மத்தியிலேதான் ஷங்கரும் அமர்ந்திருந்தான்.

மேலை நாட்டுத் துகிலுரி நடனமல்லவா? ஈற்றில் பன்னுடை போன்ற சிற்றுடை துணையுடனே, அச்சிற்றிடையாள் காற்றாடி போற் சுழன்றாடும் வேகத்தில், நூல் அறுந்த பட்டம் போன்று அவள் இடையிலிருந்த ஆடை விடைபெற்ற வேளையிலேதான், தடைபட்டமின்சாரம் சீமான்கள் உடல்களிலே உணர்ச்சி அலைகளை உற்பத்தி செய்து கொண்டிருந்ததது.

மலை தழுவிச் செல்லும் முகில் போன்று ஷங்கரின் தலை தழுவிச் செல்கிறது அவளது துகில். துகிலுரி நடனத்தின் உச்சக் கட்டத்திலே நிச்சயமாக வெளிச்சம் இல்லாது போவது அவ்விடுதியின் திட்டமிட்டசெயலே தவிர, அழகியவள் கூச்சப்பட்டதனாலல்ல!

பளிச்சென மீண்டும் எங்கும் வெளிச்சம். களிகொள்ள வேறு வழி தேடி அவ்விடுதியின் ஏனைய பகுதிகளுக்கு எல்லோரும் கலைந்து செல்கின்றனர்.

''காஸினோ'' என்னும் சூதாட்டத்தில் ஈடுபடுகிறான் ஷங்கர். பணமில்லாது சூதாட வந்தவனல்ல, இருக்கும் பணத்தை இழந்து மகிழ்ந்து பொழுது போக்க வந்த பணக்காரனவன். ஆனாலும் அதிர்ஷ்டம் அவன் பக்கம்தான்.

மதுவருந்தும் பகுதியில் சென்றமர்ந்து, ''வற் 69'' என்னும் மேலை நாட்டு மதுவைக் கொண்டு வரும்படி பரிசாரகனிடம் கூறி விட்டுப் பற்ற வைக்கிறான் ''ஸ்டேட் எக்ஸ்பிரஸ்'' சிகரெட்டை.

புகை—அவன் சிகை தழுவிச் செல்லும் போது, நகை முகங்காட்டி நடனமாடிய நங்கையவள் துகில், அவன் தலை வருடிச் சென்ற உணர்ச்சி உடலெங்கும் சிலிர்க்கிறது. ''வற் 69'' அருந்தியபடியே அமர்ந்திருக்கும் ஷங்கரின் உள்ளம் நிலை கொள்ளாது தவிக்கிறது.

தொலைபேசி மூலம் தன் மனைவி ஷீலாவுடன் தொடர்பு கொள்ள முனைந்த ஷங்கருக்கு, ஏமாற்றமே பதிலாகியது. காரணம் அவள் வீட்டிலிருந்தாலல்லவா? அவளும் இந்தநேரம் எந்த இரவு விடுதியிலோ!

பணக்காரக் குடும்பமல்லவா? இரவு விடுதிக்குச் செல்லாவிடில் இழிவாக அல்லவா இவர்களையொத்தவர்கள் கருதுவார்கள்! ஜோடியாக மட்டுமின்றி, தனித் தனியாகவும் சினிமா, பார்ட்டி, நைட் கிளப்புகளுக்குச் செல்லும் அளவுக்கு அவர்களது நாகரிகம் முன்னேறியிருந்தது.

ஷங்கர் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் பொழுது, ஷீலா மனை வருவாள். மணி இரண்டு தாண்டிய இரவு நேரத்தில் அதே போன்று ஷீலா மஞ்சத்தில் துஞ்சும் அகால வேளையில் ஷங்கர் வருவான் போதையில்.

இப்படியும் ஒரு காட்சி

மதுவுக்கான ரசீதும் பாக்கிப் பணமும் கொண்டு வந்து வைத்த பரிசாரகன் கையில் பத்து ரூபாவைச் சந்தோஷம் கொடுத்த ஷங்கரை ஆங்கில வார்த்தைகளால் அன்புடன் அர்ச்சித்தான் அவன்.

பரிவோடவனைத் தன் பக்கத்தே அழைத்த ஷங்கர், மெதுவாக ஏதோ கூறியதுமே, புன்னகை தவழ— தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுவிட்டு வந்த பரிசாரகன், பிரபல ஹோட்டல் ஒன்றின் பெயரையும், அதன் மனேஜரின் பெயரையும் கூறியதுமே, மற்றுமிரு பத்து ரூபாய்த் தாள்கள் பரிசாரகனுக்குப் பரிசாசியது.

ஷங்கரின் கார் காலி வீதி மாாக்கமாகச் சென்று ஹோட்டலொன்றை வந்தடைந்ததும், ஷங்கரை எதிர்கொண்டழைத்துச் சென்ற ஹோட்டல் மனேஜர், ''றூம் நம்பர் செவிண்'' என்று கூறியதுமே, ஐம்பது ரூபா நோட்டுக்கள் சில கை மாறின

மாடிப்படியேறி ஏழாம் நம்பர் அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் ஷங்கர். மணமான அவனுக்கு இது முதல் அனுபவம். கட்டிய மனைவியிருக்க இவ்விழிவான செயலுக்காளானான் ஷங்கர்.

அறையைத் திறந்து உள்ளே சென்றதும், ஒருவரையொருவர் அடையாளங் காணமுடியாத சிவப்பு நிற, மிக மிக மங்கலான ஒளியினிலே மங்கையொருத்தி சிற்பி செதுக்காத பொற்சிலை போல் நின்று கொண்டிருந்தாள்.

மது உண்ட மயக்கம் நீங்கி, மாது கண்ட மயக்கமானான் ஷங்கர். வெளிச்சத்தை விரும்பினான் அவன். இருளை விரும்பினாள் அவள்.

அவள் தடுத்தும் கேளாது வெளிச்சத்தைப் போட்டான் ஷங்கர். அடுத்த கணம் ''ஷங்கர்! நீங்களா?'' என்றலறினாள் அவள்!

''ஷீலா! நீயா?'' என்றலறினான் அவன்!

With best compliments from:

T. S. T. P. T. & CO.,

GENERAL MERCHANTS AND IMPORTERS

Dealers in Aluminium, Brass, Copper, Glass and Plastic wears.

No 49, Dam Street, COLOMBO-12.

T'phone: 31035. T'grams: Cork Bottle.

வேட்டையாடும் எண்ணத்துடன் வந்த மனிதன் ஒரு மானைக் கண்டான். அதனை விரட்டிப் பிடிக்கும்படி தன் நாய்க்குக் கட்டளையிட்டான்.

குட்டிக் கதைகள்

மானை நாய் விரட்டியது. சிறிது தூரம் ஓடிய மான், நாயைத் திரும்பிப் பார்த்துச் சொல்லிற்று:

''நண்ப, நீயும் நானும் ஒரே இனம். அவனோ நரன். என்னைக் கொன்று உணவாக்கிக் கொள்வதற்காக அவன் உன்னை ஏவி விட்டிருக்கிறான். அதற்கு நீ உடந்தையாக இருக்கலாமா?''

''தம்பி, அவன் நரனாக இருக்கலாம். ஆனால் எனக்கு எஜமானன். அவனுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டிய வேலையாள் நான். அவனது கட்டளையை நிறைவேற்றுவது என் கடமை'' என்றது நாய்.

நாயும் மனிதனும்

''அப்படியா? உன்னிடத்திலிருந்து தப்பி ஓடுவது எனது கடமை'' எனக் கூறிய மான், முன்னரிலும் வேகமாக ஓடி மறைந்தது.

விரட்டிக் களைத்த நாய், ஏமாற்றத்துடன் எஜமானனிடம் திரும்பியது. அவனுக்கோ அகோர பசி. இரை ஒன்றும் கிடைக்கவில்லை. நாயைப் பார்த்தான்; அதில் வெறி இருந்தது. நாய் அவனைப் பார்த்தது; அதில் நன்றி இருந்தது.

கையிலிருந்த ஈட்டியினால் நாயைக் கொன்றான் உணவுக்காக!

''ஒரேயடியாக இவனது செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது என் பாக்கியமே'' என நினைத்துக் கொண்டே நாயின் ஆத்மா அமைதி அடைந்தது. அவன் தீமூட்டத் தலைப்பட்டான்.

கண் செவி வாய்

மனிதர் ஒருவர் தன் நண்பரின் வீட்டுக்கு விருந்தாளியாகச் சென்று சில நாட்கள் தங்கி இருந்தார்.

வீட்டிலுள்ளவர்களிடையே எப்போதும் சண்டை சச்சரவு. மருமகளின் செய்கை மாமிக்குப் பிடிக்கவில்லை; மாமியின் செய்கை மருமகளுக்குப் பிடிக்கவில்லை. தாய் சொல்வதை மகன் கேட்பதில்லை; மகன் சொல்வதைத் தாய் சட்டை செய்வதில்லை. மச்சாள் பிரச்சினை வேறு. ஆனால் எல்லோரும் வீட்டுத் தலைவருடன் ஒழுங்காக நடந்து கொண்டார்கள். அவருக்குத் தனி மரியாதை செலுத்தினர்கள்.

பிறைகாந்தன்

விருந்தாளிக்கு ஆச்சரியத்தையும், அதே வேளையில் வெறுப்பையும் இந்தக் குடும்ப சூழ்நிலை ஏற்படுத்தியது.

விடை பெறும்போது விருந்தாளி, வீட்டுத் தலைவரிடம் குடும்பத்தின் நிலை பற்றி பிரஸ்தாபித்தார். மௌனமாக சிரித்த அந்தத் தலைவர் சொன்னர்:

''வீட்டில் பிரச்சினை அல்லது சண்டை ஏற்படும்போது நான் சில வேளைகளில் குருடனாகவும், சில வேளைகளில் செவிடனாகவும், இன்னும் சில சமயத்தில் ஊமையாகவும் இருந்து விடுகிறேன். அதனால் எனக்கு வீட்டு நடப்பு எதுவும் தெரியாது என்று மற்றவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் நிலை அப்படி இல்லை. தாயும் மகனும் பேசும்போது, மருமகளின் செவி பாம்புச் செவியாகி விடுகிறது. அண்ணி ஏதும் செய்யும்போது மச்சாளின் கண் கழுகுக் கண்ணாகி விடுகிறது. இவற்றைக் கண்டிக்க முற்படும்போது தாயின் வாயோ வாளினிலும் கூர்மையாகிவிடுகிறது.''

தலைவரின் விளக்கத்தை விருந்தாளி ஏற்றுக் கொண்டார். அதே வேளையில், உள்ளே ஒரே ரகளையாக இருந்தது.

கலசம்
(மாத இதழ்)

நாடு
முழுவதும்
விற்பனையாளர்கள்
தேவை.

ஏக விநியோகஸ்தர்கள்:
அருள் குறெசீஸ்
46, பிரதான வீதி,
மாகோ.

எமது விற்பனையாளர்கள்:

இரத்தினபுரி—

ராஜா ஸ்ரோர்ஸ்
இல 283. மெயின் வீதி,
இரத்தினபுரி.

யாழ்ப்பாணம்—

வெ. தவராஜசிங்கம்
இல. 37/2, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

நெல்லியடி—

நெல்லை. ஐ. நடேஸ்
தென்றலகம்,
நெல்லியடி.

மட்டக்களப்பு—

ஆர். எஸ். கணேசன்
கணேசன் ஸ்ரோஸ்,
இல. 13, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

தெல்தோட்டை—

எம் எஸ். மணி
36, பிரதான வீதி,
தெல்தோட்டை.

மன்னார்—

சித்திரா நூலகம்
கிரான்ட் பஜார்,
மன்னார்.

மஸ்கேலியா—

சந்திரலெட்சுமி ஸ்ரோர்ஸ்
15, பிரதான வீதி,
மஸ்கேலியா.

பதுளை—

மீனும்பிகை நியூஸ் ஏஜென்ஸி
235, லோவர் வீதி,
பதுளை.

பூண்டுலோயா—

ஸ்ரீலங்கா சென்ரல் புத்தகசாலை
114, பெரிய பஜார்,
பூண்டுலோயா.

தலைமன்னார்—

எஸ். எம் மொஹமட்ஹலீம்
பயிஸால் ஸ்ரோர்ஸ்,
தலைமன்னார் பியர்.

ஹல்கரனேயா—

சுகுமார் புத்தகசாலை
பத்திரிகை புத்தகவிற்பனையாளர்,
59, ருகலை பஜார்,
ஹல்கரனேயா.

பிரதி ஒன்றுக்கு 50 சத வீதம் முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

தில்லிகன்று

卐 இந்தியாவில் மேல் நாட்டுப் புத்தகங்களை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் இறக்குமதி செய்ய முடியுமா? முடியாது. மலிவான புத்தகங்கள் என்றால் 2,000 பிரதிகளுக்கு மேல் வரவழைக்க முடியாது. அதற்கு மேல் வேண்டும் என்றால் பிரசுர கர்த்தரிடம் அனுமதி பெற்று இந்தியாவிலேயே அச்சடித்துக்கொள்ள வேண்டும். இதனால் மேல் நாட்டுப் புத்தகங்கள் பல இப்பொழுது இந்தியாவில் அச்சாகின்றன.

卐 நீங்கள் சிரித்தால் மட்டும் போதாது. பிறரையும் சிரிக்கவைக்க வேண்டும். உங்களோடு சேர்ந்து பிறரும் சிரிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் உங்களுக்காகத் தங்கள் உயிரையும் விடக்கூடிய உயிர் நண்பர்கள் கிடைப்பார்கள்.

卐 அண்மையில் வட பகுதிக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அங்கு மிளகு ரசத்தைச் சுவைத்துச் சாப்பிட்டார். இப்பொழுது அமைச்சருக்கு மிளகு ரசம் "டேஸ்ட்" விடுவதாயில்லை. யாழ்ப்பாணத்து மிளகு ரசம் சாப்பிடுவதற்காக இன்னொரு தடவை அங்கு செல்ல வேண்டும் என்கிறார் மஹ்மூத்.

卐 குடியரசு பிரகடனப்படுத்தப்பட்ட நவரங்கசாலைக் கட்டடத்துக்கான வரைபடத்தை வரைந்த குழுவில் பிரதம பங்கு வகித்தவர் அமைச்சர் குமாரசூரியர். இந்தக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்குப் பணம் திரட்டிக் கொடுப்பதற்கு முன்னணி

யில் நின்றவரும் அமைச்சர்தான். தானே திட்டமிட்ட, கட்டிய கட்டடத்தில்தான் இலங்கைக் குடியரசின் முதலாவது தமிழ் அமைச்சராகக் குமாரசூரியர் கலந்துகொண்டார்.

卐 தங்களுக்குப் பிடித்தமான புத்தகத்தைத் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினால்தான் பெரும்பாலும் நூல் நிலையங்களில் புத்தகங்களை வாசகர்கள் களவாடுகிறார்களாம்.

卐 சஞ்சிகையாளர் ஒன்றியத்தில் இணைச் செயலாளராக 'பிரேம்ஜி' என். ஞானசுந்தரம் இருக்கிறார். இவர் நல்ல இலக்கியப் பற்றுள்ளவர். ஈழத்தில் சஞ்சிகைகள் தோன்றி, வியாபார ரீதியில் வெற்றிபெற வேண்டும் என்ற துடிப்புக்கொண்டவர். இந்தியச் சஞ்சிகைகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்குப் பெருமளவில் உழைத்தவர் பிரேம்ஜி. பிரேம்ஜி பழகுவதற்கு இனியவர்— சிறந்த எழுத்தாளர்.

卐 ஜாக்குலினின் கணவர் ஒனாஸிஸ் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டு இருக்கிறார். இந்தப் புத்தகத்தின் பெயர் 'ஒனாஸிசின் சிந்தனைகள்'. பேங்க் செக் புக்கைப் போல இந்தப் புத்தகத்தை அமைத்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

卐 இந்தி நடிகை ராக்கி 18 வயதில் திருமணம் செய்து கொண்டார். 20 வயதில் விவாகரத்து செய்து கொண்டார். மறுமணம் செய்வதுபற்றி ராக்கியிடம் கேட்டால் நான் சூடு கண்ட பூனை பயமாக இருக்கிறது என்கிறார்.

卐 அமெரிக்காவில் வேகமாகக் கிருஷ்ண பக்தி பரவி வருகிறது, இதனால் ஏகப்பட்ட அமெரிக்கர்கள் ''ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா'' என்று பஜனை செய்து வருகிறார்கள். இப்போது அமெரிக்காவில் கொஞ்சம் கொஞ்சமாக முருக பக்தியும் பரவி வருகிறது.

卐 எதை யோசித்தாலும் நிதானமாக யோசியுங்கள். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் உறுதியோடு ஈடுபடுங்கள். எதை விட்டுக் கொடுத்தாலும் பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுங்கள். எதை எதிர்த்தாலும் திடமாக எதிர்த்து நில்லுங்கள். இவையெல்லாம் வெற்றிக்குரிய வழிகள்.

卐 நடிகை லெட்சுமி, தன் சினிமா சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்க மனேஜர் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. இவர் தாயார் நடிகை ருக்மணி தான் படப்பிடிப்பு சம்பந்தமான எல்லாக்

காரியங்களையும் கவனித்துக் கொள்கிறார். லெட்சுமியின் கணவர் பாஸ்கர் சினிமா விஷயங்களில் தலையிடுவதில்லை.

卐 ரிச்சர்ட் பர்ட்டனிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்து வருகிறது. இவர் தன் மனைவி எலிசபெத் டெய்லருக்கு ஒவ்வொரு தடவையும் விலை கூடிய நகைகளை வாங்கிக் கொடுக்கும் போதெல்லாம் அதன் மதிப்புக்கு இணையான ஒரு தொகையைத் தருமம் செய்கிறார்.



卐 யாழ்ப்பாணத் தமிழை மேடை நாடகங்களில் அச்சொட்டாக பேசி நடிப்பதில் சமர்த்தர் ராஜகோபால். புரோக்கர் கந்தையா இதற்கு உதாரணம். இவரது கரகரத்த குரல் கலா ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. இவர் குரலை வானொலியில் செவிமடுப்பவர்கள், இவரது வயதை நாற்பது என்று கணிப்பர். இதுதான் தவறு. கலியாண மார்க்கட்டே இவருக்கு இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது.

卐 நாடகக் கலைச் செல்வர்கள், டி.கே. சங்கரன், டி.கே. முத்துசாமி, டி.கே.சண்முகம், டி.கே. பகவதி ஆகிய சகோதரர்கள் நால்வரில் மூன்றாமவர் திரு. க.சண்முகம். இவரது தந்தையார் தி. கண்ணுசாமிப் பிள்ளை. தாயார் சீதையம்மாள். 1912ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26ம் திகதி கேரளாவைச் சேர்ந்த திருவனந்தபுரத்தில் டி.கே. சண்முகம் பிறந்தார். இவருக்கு இப்பொழுது வயது 60.

卐 ஐக்கிய நாடுகள் சபை என்பது ஒரு பெரிய சமுத்திரம். ஐக்கிய நாடுகள் சபைக்கு உலகம்முழுவதிலுமுள்ள கிளையலுவலகங்கள் தொகைகள் 177. ஐக்கிய நாடுகள்

சபை அலுவலகங்களில் மொத்தம் 35,000 பேர் வேலை செய்கின்றனர். இப்படி இருந்தால்ஐ.நா.வுக்கு ஏன் பணக் கஷ்டம் வராது?



卐 நலிவுற்றுக் கிடந்த ஈழத்து நாடக உலகை நாடிபிடித்துப் பார்த்து உஷார் படுத்தியவர் லடீஸ் வீரமணி. நடிப்புத் துறையில் இவர் ஒரு நடிகவேள். கனவுலகக் கதைகள் இவருக்குக் கசப்புத் தரும். யதார்த்தக் கதைகள் இவருக்கு விருப்புத் தரும். அஞ்சாது தன் கருத்தைத் துணிந்து சொல்லும் சுபாவ முடையவர் லடீஸ். நாடகமே தன் பேச்சு, மூச்சு எல்லாம் என்று வாழும் லடீஸ் 'நாடகம் எனக்குத் தொழில், டிறைவிங் எனது பொழுது போக்கு என்று அழுத்திச் சொல்லுகிறார். ஆற்றலும், அனுபவமும் மிக்க இந்தத் தமிழ்க் கலைஞர் 'கூத்தும் கூத்தாடியும்' என்ற தலைப்பில் கலசம் வாசகர்களைச் சந்திக்க இருக்கிறார்.

卐 காப்பியைவிட டீ நல்லது என்கிறார் ஒரு டாக்டர். அதற்கு இவர் சொல்லும் காரணம் என்ன? காப்பி குடிப்பதால் இரத்தக் குழாய்கள் தடித்து விடுகின்றன. டீ குடிப்பதால் இரத்தக் குழாய்கள் தடிப்பது இல்லை.

卐 பிரிட்டனில் இருக்கும் ஸ்காட்லண்ட் யார்ட்டில் வேலை செய்பவர்கள் மிகவும் திறமைமிக்க துப்பறியும் நிபுணர்கள். இவர்கள் எந்த வழக்கில் ஈடுபட்டாலும் கையில் துப்பாக்கியோ, வேறு ஆயுதமோ தாங்கிச் செல்வதில்லை. எந்தவித ஆயுதமும் இல்லாமல் பயங்கரக் குற்றவாளிகளை இவர்கள் பிடிக்கிறார்கள்.

卐 கார்களில் வெறும் நம்பரை மட்டும் தான் போடுகிறார்கள். இதனால் கார் யாருக்குச் சொந்தமானது என்பது சாலையில் நடமாடுபவர்களுக்குத் தெரிவது இல்லை. கார்களில் காரின் சொந்தக்காரரது பெயரையும் முகவரியையும் எழுதிவைக்க வேண்டும் என ஒரு சட்டம் வந்துவிட்டால் காரை ஓட்டுபவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன், காரை ஓட்டுவார்கள். விபத்துக்கள் குறையும். இப்படி ஒரு யோசனை! இந்த யோசனையைச் சொல்லியிருப்பவர் பிரிட்டிஷ் ராணியின் மகன் பிலிப் இளவரசர்.

卐 வெளி நாடுகளைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் அடிக்கடி இந்து மகா சமுத்திரத்தில் வந்து சுற்றுகின்றன. இவைகள் எந்தெந்த நாட்டுக்கப்பல்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. இந்து மகா சமுத்திரத்தில் அமைதி குலைந்து வருகிற



卐 பிரபல வர்த்தகரும், அரசியல்வாதியுமான திரு. ரி. நீதிராஜாவிடம் நாம் படித்து அறியவேண்டியவை பல உண்டு. இவரும் கல்கி பீடி அதிபர் சின்னத்துரையும் இணைபிரியா நண்பர்கள். ஆனால் இவர்களுக்குள் 'பிஸினஸ்' சில் பலத்த போட்டி உண்டு. கல்கி ஒரு ஹோட்டலை வாங்கினார். நீதியோ அதைவிடப் பெரிய ஹோட்டலை வாங்கி உள்ளார். இவர்களுக்குள்ளான பெரிய ஒற்றுமை என்னவென்றால் பிஸினஸ் போட்டியில் பணமுடை ஏற்பட்டால் ஒருவருக்கொருவர் கொடுத்துதவிக் கொள்ளுவர்.

卐 சந்திரனுக்கு அடிக்கடி மனிதனை அனுப்புவதால் பயன் ஒன்றும் இல்லை. பணமும் நேரமும் தான் வீணாகிறது என்பதை அமெரிக்கா இப்போது உணர்ந்து கொண்டது. இதனால் இந்த வருஷம் அமெரிக்கா இரண்டே தடவைகள் மட்டும் மனிதர்களைச் சந்திரனுக்கு அனுப்பப் போகிறது. அதன்பிறகு அமெரிக்கா சந்திரனுககு யாரையும் அனுப்பப் போவதில்லை.

卐 [torn]ாஜி கணேசன் பாபு படத்தைப் [torn]ர்த்தார். அதில் வரும் இவரது சோக நடிப்பைப் பார்த்துவிட்டுக் கண் கலங்கினார். நீங்கள் நடித்த படத்தைப் பார்த்துவிட்டு நீங்களே கண்ணீர் விடுகிறீர்களே என்று இவரைக் கேட்டார்கள். அதற்குச் சிவாஜி ''நான் நடிக்கும்போது நடிகன் படம் பார்க்கும் போது ரசிகன்'' என்று சொன்னார்.

卐 ரெப்ரிஜிரேட்டரில் சில வேளைகளில் நாற்றம் வரும். கண்ட உணவுப் பொருட்களையும் ரெப்ரிஜிரேட்டரில் வைப்பதால் வரும் வாசனை இது. ரெப்ரிஜிரேட்டரில் கரித்துண்டுகள் சிலவற்றை போட்டு வைத்தால் இந்த மாதிரி வாசனை வராது. கரித்துண்டுகளை ஒரு தட்டில் போட்டு, ஒரு பககமாக வைத்துவிட வேண்டும்.

卐 வட்டமான முகம் உடைய பெண்களைப் பற்றி ஒரு ஜோஸ்யம். இவர்கள் எப்போதும் மற்றவர்கடளிம் அன்புடன் நடந்து கொள்வார்கள். இவர்கள் உடம்பு மிக ஆரோக்கியமாக இருக்கும். இவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் இளமையுடன் இருப்பார்கள். ஆனால் இவர்கள் கொஞ்சம் அதிகமாகப் பேசுவார்கள். அதிகமாகச் சாப்பிடுவார்கள்.

卐 வங்காள தேசத்தில் இருந்து மேற்குப் பாகிஸ்தானுக்கு ஏகப்பட்ட வெற்றிலை போய்க் கொண்டிருந்தது. இப்போது அது நின்றுவிட்டது. மேற்குப் பாகிஸ்தானில் வெற்றிலை கிடையாது. 'ஆகையால் மேற்குப் பாகிஸ்தானில் ஏதோ மரத்தின் இலையை வெற்றிலையைப் போல் மெல்லுகிறார்கள்.

卐 வாயில் புண் இருக்கிறதா? தேங்காய்ப் பாலில் சிறிது தேனைக் கலந்து சாப்பிடுங்கள். வாயில் புண் இருந்தாலும் சரி, வயிற்றில் புண் இருந்தாலும் சரி, புண் குணமாகிவிடும்.

卐 நெருப்பினால் ஏற்படும் புண்களுக்கு நன்றாகக் கனிந்த வாழைப் பழங்களைப் புண்களின் மீது தடவி வெற்றிலையால் மூடித் துணியால் கட்டி விடுங்கள். நெருப்புச் சுட்ட புண்கள் விரைவில் ஆறிவிடும்.

卐 அடிக்கடி வயிற்று வலி வருகிறதா? அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிடுங்கள். வயிற்று வலி குணமாகிவிடும் வயிற்றைச் சுத்தம் செய்து கிருமிகளை அழித்துவிடும் தன்மை அன்னாசிப் பழத்திற்கு உண்டு.

卐 பெண்கள் எப்போதும் சுத்தமான உடைகளையே அணிய வேண்டும். பெண்கள் எப்போதும் சிரித்த முகத்துடனேயே இருக்க வேண்டும். உடையில் சுத்தமும், முகத்தில் சிரிப்பும் கொண்ட பெண்கள் எப்போதும் மகிழ்ச்சிகரமாக இருக்கிறார்கள்.

卐 உணவை அளவுடன் சமைக்கவேண்டும். அளவுடன் சாப்பிட வேண்டும். மிஞ்சிப்போன உணவுகளை வைத்திருந்து மறுநாள் சாப்பிடக் கூடாது. உணவில் விஷக்கிருமிகள் பரவிவிட்டால், உணவு விஷமாகிவிடுகிறது. விஷமாகிவிட்ட உணவால் வயிற்றுவலி, வாந்தி, மயக்கம் முதலியன வரும்.

卐 உடல் முழுவதும் தேமல் இருக்கிறதா? இலுப்பை மரத்தின் இலைகளை வேகவைத்துக் களிம்பு போல அரைத்து, அதைத் தேமல் இருக்கும் இடங்களில் தேய்த்துக் குளியுங்கள். தேமல் போன்ற சரும நோய்கள் குணமாகிவிடும். இலுப்பை இலைகளில் கிருமிகளைக் கொல்லும் சக்தி இருக்கிறது.



卐 ஈழத்துத் தமிழ்த் திரையுலகில் குத்து விளக்கை பரீட்சார்த்தமாக ஏற்றி வைத்த வி. எஸ். ரி. பிலிம்ஸ் அதிபர் திரு. வி. எஸ். துரைராஜா மனம் சலிக்காது இன்னெரு படத்தையும் மிக விரைவில் எடுக்கவிருக்கிறார். இந்தப்படம் குத்துவிளக்கைப் போலல்லாது மிக ஜனரஞ்சகமாக அமையுமென்றும் தென்னிந்திய திரைப் படங்களுடன் போட்டி போடுமளவுக்கு தரமிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

卐 சிகரெட் விலை பல மடங்கு ஏறிவிட்டது. சிகரெட் பிடிப்பதால் புற்று நோய் வருகிறது என்று பிரசாரம் செய்கிறார்கள். விளம்பரம் செய்கிறார்கள். அப்படி இருந்தும் சிகரெட் விற்பனை குறைய வில்லை. தீமையைச் சுலபத்தில் விட்டுவிட முடியாது!

卐 வயதாகிவிட்டவர்கள் அடிக்கடி வெட்ட வெளியில் நின்று நன்ருக மூச்சை இழுத்து விடவேண்டும். தினமும் இப்படிப் பல தடவைகள் செய்து வந்தால் ஞாபக மறதி ஏற்படாது. பத்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள்கூட மிகத் தெளிவாக நினைவுக்கு வரும்.

卐 உங்கள் உடம்பில் இரத்தம் சுத்தமாக இருக்கிறதா? இரத்தம் சுத்தமாக இல்லாவிட்டால் தோலில் மாறுதல் ஏற்படும். தோலில் புண்கள் வரும். இரத்தத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பச்சைக் காய்கறிகளையும், கீரைகளையும் நிறைய சாப்பிடவேண்டும்.

卐 தமிழ் சஞ்சிகையாளர் ஒன்றியத[்தி]... அங்கம் வகிக்கும் சஞ்சிகையாளர்க[ள்] அத்தனை பேர்களும் முட்டாள்களா என்[று] கேள்வி எழுகிறது. ஏதனுல்? சஞ்சிகை[] யாளர் ஒன்றியத்தில் ஆலோசகர்கள் என[] சில பிரமுகர்கள் 'பப்ளிசிட்டிக்காக' சேர்ந்தும், சேர்க்கப்பட்டும் உள்ளனர். இவ[ர்] களின் ஆலோசனையைக் கேட்டுத்தா[ன்] கௌரவத்துக்குரிய ஈழத்துச் சஞ்சிகை ஆ[சி]ரியர்கள் இயங்கவேண்டுமா? அவர்களுக்கு[ச்] சுயமாக மூளை இல்லையா?—எஸ். பன்னீர்[ச்] செல்வம், கொழும்பு-6.

卐 நடிகை கே. ஆர். விஜயாவுக்கு 'பிளாஷ்' போட்டு படம் எடுப்பது பிடிக்காது. படத்தைச் சுற்றி கறுப்பாக நிழல் விழும் என்ற காரணத்தால் அவர் போட்டோ கிராப்பர்களை செட் லைட்டிலேயே படம் எடுக்கும்படி கேட்டுக் கொள்கிருர்.

卐 டொமினிக் ஜீவா நல்ல பேச்சாற்றல் உள்ளவர். ஒரு கூட்டத்தில் 10 நிமி[ட]ம் பேசினுல் போதும். அங்கு வந்தவர்[]



களை எல்லாம் அப்படியே ஈர்த்துவி[டும்.] டொமினிக்குக்கு இளம் வட்டங்கள் அதிகமாகச் சினேகிதம்.

卐 நாடகத்துறையை சினிமாப் பாணியில் கொண்டு வர முயல்கிறார் க'லச் செல்வன் இவரது 'இரு துருவங்கள்' முதல் சென்ற மாதம் மேடையேறிய 'ஒரு மனிதன் இரு உலகம்' வரை இது தான் பிரதிபலிக்கின்றது. இவர் அண்மையில் ெ... இன்னொரு சாதனை 16 பெண்களை ...மேடையில் ஏற்றி, இறக்கியது. இதற்கு ...000 செலவாகி இருக்கிறதாம்!

卐 ...விஞர் கண்ணதாசன் கடந்த 25 ஆண்டுகளில் 3,000 பாடல்கள் எழுதி உள்ளார். இவை சினிமாப் பாடல்கள் மட்டும்!

卐 தமிழ்நாடு துணைசபாநாயகர் சீனிவாசனுக்கும், நடிகை வசந்திக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது. அரசியலும் சினிமாவும் திருமணம் செய்து கொண்டன என்று கலைஞர் கருணாநிதி இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார். அரசியல் துறையில் உள்ள சீனிவாசனும், கலைத்துறையில் உள்ள வசந்தியும் எப்படிச் சந்தித்துக் கொ...டார்கள்? வசந்தி இப்போது ஒரு படத் தயாரிப்பாளர். இவர் ஒரு படம் எடுக்கக் கதையைத் தேடினார். சீனிவாசன் ஒரு ...வர். தன் கதையைப் படம் எடுக்க ...ய நாடினார். பின் என்ன? இரு... படக்கதையை மறந்துவிட்டுச் சொந்தக் கதையை ஆரம்பித்து விட்டார்கள்.

卐 ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்த விதமான வித்தியாசமும் இல்லை. ஆண்களும், பெண்களும் சமம் என்று அமெரிக்காவில் ஒரு சட்டமே வந்துவிட்டது. விவாகரத்து செய்துவிட்டால் இதுவரையில் கணவன் தான் மனைவிக்கு வாழ்க்கைப் பணம் கொடுக்கவேண்டி இருந்தது. இந்தச் சட்டத்தின்படி விவாகரத்துச் செய்துவிட்ட மனைவியும் பணம் கட்ட வேண்டும்.

卐 பெண்கள் முகத்தை மிக அழகாக வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. கைகளையும் மிக அழகாக வைத்துக்கொள்ள வேண்டும். கைகளில் அளவுக்கு மேல் சதை போடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கண்ட இடங்களிலும் கைகளை ஊன்றி உட்காரக் கூடாது. கைகளை அழகாக வைத்துக்கொள்ளும் பெண்கள் எப்பொழுதும் கவர்ச்சியுடன் இருப்பார்கள். ●

நாகரிகத்திற்கேற்ப வண்ண
வண்ண டிசைன்களில்
சிக்கன முறையில் தங்க, வைர
நகைகள் வாங்க
சிறந்த ஸ்தாபனம்:
V
விஜய மகால்,
205, காலி ரோட்,
மொரட்டுவ.
தொலைபேசி: 357.

..., கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனை.—கலசம் பப்ளிக்கேஸன் ... கனக. பாலசுப்ரமணியம் அவர்களால், கொழும்பு—2 அருளொளி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் ப... Kalasam 30, Sea Avenue Colombo 3. Phone: 26778